16 - 30 ஜூன் 99
www.padippakam.com
ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்



**காஷ்மீர் பிரச்சினைக்கு எல்லைப் போர் தீர்வாகுமா?**



www.padippakam.com

# தொழிலாளர்களின் போர்க்குணம் தொழிற்சங்கங்களின் துரோகம்

நெய்வேலி நிலக்கரி நிறுவனத் தொழிலாளர்கள் மீது இதுவரை கண்டிராத கொடூரமான தாக்குதல், கடந்த மே 18-ந் தேதியன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தொழிற்சங்கப் போராட்டங்களில் மிகச் சாதாரணமாக மேற்கொள்ளப்படுவது மறியல் போராட்டமாகும். ''காலையில் கைதாகி, மாலையில் விடுதலை'' என்று பழகிப் போன நினைவோடு சென்ற தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களும் மிகவும் கோரமான முறையில் போலீசாரால் தாக்கப்பட்டுள்ளனர்.

நெய்வேலியில் ''இன்கோ சர்வ் சொசைட்டி'' தொழிலாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்தக் கோரி நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். ஏற்கனவே 1996-இல் நடத்திய போராட்டத்தின் விளைவாக 5000 தொழிலாளர்களில் 1500 பேர் மட்டும் நிரந்தரமாக்கப்பட்டனர். மீதி 3500 தொழிலாளர்களை வரும் 2000-ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் நிரந்தரம் செய்வதாக நிர்வாகம் உறுதியளித்தது. இதன்படி நிர்வாகம், தொழிற் சங்கங்களின் கூட்டு கவுன்சில் மற்றும் மாநில அரசு ஆகியன இணைந்து 12(3) என்ற ஒப்பந்தத்தை நிறைவேற்றின. ஆனால், மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் எந்தத் தொழிலாளியும் நிரந்தரமாக்கப்படாமல், ஒப்பந்தம் குப்பைக் காகிதமாகியது.

தொழிற்சங்கக் கூட்டு கவுன்சிலின் துரோகத்தைக் கண்டு வெறுப்புற்ற தொழிலாளர்கள், இன்கோ சர்வ் இயக்குநர்களின் தலைமையில் திரண்டு போராடத் தொடங்கினர். ''எங்கே தமது கையை விட்டு 3500 தொழிலாளர்கள் போய் விடுவார்களோ? '' என்று அரண்டு போன தொழிற்சங்கக் கூட்டு கவுன்சில் உண்ணாவிரதம், உணவகப் புறக்கணிப்பு ஆகிய போராட்டங்களை அறிவித்தனர். அதன் தொடர்ச்சியாக, நிரந்தரத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, செருப்புப் படி முதலான கோரிக்கைகளுடன், இன்கோ சர்வ் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் கோரிக்கையையும் சேர்த்து 13 அம்சக் கோரிக்கையாக வைத்து, தலைமை நிர்வாக அலுவலகம் முன்பு, சென்ற மாதம் 18-ஆம் தேதியன்று மறியல் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தனர்.

அன்று காலையில் மறியல் போராட்டத்துக்குத் திரண்டு வந்த தொழிலாளர்கள், தலைமை நிர்வாக அலுவலகத்துக்கு வெகு தொலைவில் போலீசாரால் தடுக்கப்பட்டனர். வழக்கமாக நுழைவாயில் அருகே, ஆர்ப்பாட்டம், மறியல் நடத்த அனுமதித்து வந்த நிர்வாகம், இப்போது பெருமளவு போலீசாரைக் குவித்து வெகு தொலைவில் நின்று போராட்டம் நடத்தச் சொல்வதைக் கண்டு தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர். போலீசார் போட்டிருந்த தடுப்பை மீறிக் கொண்டு நுழைவாயில் அருகே சென்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொழிலாளர்கள் முற்பட்டதும், எவ்வித முன்னறிவிப்புமின்றி போலீசார் கண்மூடித்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். தொழிலாளர்கள், தொழிற்சங்க முன்னோடிகள், தலைவர்கள் எனப் பாகுபாடின்றி ஓட ஓட விரட்டி போலீசு வெறியர்கள் நடத்திய தடியடியில் பலரது மண்டை உடைந்தது. தொழிற்சங்க முன்னணியாளர்கள் படுகாயமடைந்தனர்.

இனி யாரும் போராடக் கூடாது என்று தொழிலாளர்களை எச்சரிக்கும் வகையிலே திட்டமிட்டே நிர்வாகம் போலீசைக் கொண்டு இக்கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளது. இக்கொடுஞ் செயலைக் கண்டித்தும் நீதி விசாரணை கோரியும் 18-ஆம் தேதி இரவு 10 மணி முதல் 48 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தை தொழிற்சங்க கூட்டு கவுன்சில் வேறு வழியின்றி அறிவித்தது.

இதற்கிடையே காயமுற்ற தொழிலாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு பெருந்திரளாக தொழிலாளர்கள் குழுமியிருந்தனர். அப்போது, தாங்கள் தொழிலாளர்களால் கல்லடிபட்டுக் காயமடைந்ததாக மருத்துவமனையில் பதிவு செய்து கொள்ள வந்த போலீசாரை தொழிலாளர்கள் கல்லெறிந்து விரட்டியடித்தனர். நிலைமையை உளவறிய வந்த இரண்டு உயரதிகாரிகளைச் சிறைபிடித்து, சுமார் 3 மணி நேரம் அவர்களை உயிர் பயத்தில் தவிக்க வைத்தனர். நெய்வேலி நிர்வாகம் இதுவரை கண்டிராதபடி தொழிலாளர்கள், பொறியாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து மிகப்பெரிய வேலை நிறுத்தப் போராட்டத்தை போர்க் குணத்துடன் நடத்தினர்.



இவ்வளவு பெரிய போராட்டம் நடத்தியும், கோரிக்கைகள் எதுவும் முழுமையாக நிறைவேற்றப்படாமல், அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார் என்று சமரசப் பேச்சு வார்த்தையில் இறங்கிய கூட்டு கவுன்சில் துரோகிகள், வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பாதியிலேயே கைவிடுவதாக அறிவித்தனர். இதில் சி.ஐ.டி.யு. சங்கம் மட்டுமே, அறிவித்தபடி 48 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தது.

தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி நடத்திய இப்போராட்டத்தின் மூலம் செருப்புப் படி ரூ. 600 வாங்கித் தந்ததைத் தவிர, கூட்டு கவுன்சில் துரோகிகள் வேறெதையும் சாதிக்கவில்லை.

தொழிலாளர்களை இவ்வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அணிதிரட்டியும், குறிப்பாக இன்கோ சர்வ் தொழிலாளர்களின் போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்தியும் வந்துள்ள தொழிலாளர் பிரச்சாரக் குழு, தொழிற்சங்கக் கூட்டு கவுன்சிலின் துரோகத்தை அம்பலப்படுத்தியும், தனியார்மய - தாராளமயக் கொள்கையால் தொழிலாளர்களின் உரிமையும் எதிர்கால வாழ்வும் பறிக்கப்பட்டு வருவதை விளக்கியும் சுவரொட்டி, துண்டுப் பிரசுரம், கேலிச் சித்திரம், தெருமுனைக் கூட்டம் எனப் பல வடிவங்களில் தொடர் பிரச்சார இயக்கத்தை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக, தொழிலாளர்களின் பேராதரவுடன் கடந்த ஜூன் 2-ஆம் நாளன்று போலீசு தாக்குதலைக் கண்டித்தும், கூட்டு கவுன்சிலின் துரோகத்தை அம்பலப்படுத்தியும் எழுச்சிமிகு பொதுக்கூட்டத்தையும் நடத்தியுள்ளது. துரோகக் காரிருள் சூழ்ந்த இருண்ட வானில் புதிய, புரட்சிகர ஒளிக்கீற்றைக் கண்ட உற்சாகத்துடன் தொழிலாளர்கள் தொ.பி. குழுவை நம்பிக்கையுடன் வரவேற்று ஆதரிக்கின்றனர்.

**தகவல்:**
**தொழிலாளர் பிரச்சாரக் குழு,**
**நெய்வேலி.**



படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

தொகுதி: 14

இதழ்: 14 - 15

1 ஜூன்'99 - 30 ஜூன்'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 8015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# காஷ்மீர் பிரச்சினைக்கு எல்லைப் போர் தீர்வாகுமா?

"காஷ்மீர் - பாகிஸ்தான் எல்லையில் நமது ஜவான்கள் உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நமது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு அனைவரும் ஒரே குரலில், ஒற்றுமையாக, போரில் நமது நிலையை ஆதரிக்க வேண்டும். அதைவிடுத்து நமது இராணுவத்தையோ, நமது அரசையோ, போரில் இந்தியாவின் நிலையையோ விமர்சிப்பது தேசத் துரோகமாகும்" - இந்தக் கருத்தை, குறிப்பாக ஆளுவோர் வன்மையாக வலியுறுத்தி வருகின்றனர். போருக்கான நோக்கங்கள், காரணங்கள், நியாயங்கள், போர்க் களத்தில் நிலவும் யதார்த்த நிலைமைகள் போன்ற உண்மைகளை நம்பிக்கையோடு நாட்டு மக்கள் முன்பு வைக்கத் தவறினால், வதந்திகளும் ஊகங்களும் வலம் வருவதைத் தடுக்கமுடியாது. தவிரவும், பாகிஸ்தான் எதிர்ப்பு தேசியவெறிக் கூச்சலில் எப்போதும் முன்னணியில் நிற்கும் பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பல் தலைமையிலான அரசு, வெள்ளரிக் காட்டில் வாலறுந்த நரியைப் போல அலறிக் கொண்டிருக்கிறது.

"ஆஃப்கான் கூலிப்படையினர் (இதை பிரிகேடியர் மோகன் பண்டாரி மறுத்துள்ளார்), பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற காஷ்மீரி இசுலாமியத் தீவிரவாதிகள், முறைசாரா பாக். படையினர் உட்பட 700 பாக். ஊடுருவல்காரர்கள் இந்தியா - பாக். கட்டுப்பாட்டு எல்லையில் 6 கி.மீ. தூரத்துக்குக் கடந்து வந்து, சுமார் 200 சதுர கி.மீ. பரப்பளவைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டனர். திராஸ் - கார்கில் - பட்டாலிக் பகுதியில் சுமார் 150 கி.மீ. தூரத்துக்கு நெடுக, மலை உச்சியில் பதுங்கு குழிகள் வெட்டிக் கொண்டு, "ஸ்டிங்கர்" ஏவுகணை உட்பட நவீன ஆயுதங்கள், மற்றும் பாக். படையின் பின்பலத்தோடு நிலை கொண்டுள்ளனர்."

17,000 அடி உயரமுள்ள மலை முகடுகளின் வழியே போகும் கட்டுப்பாட்டு எல்லையில் வழக்கமாக 30 இராணுவச் சாவடிகள் இருக்கும். குளிர்காலத்தில் அந்தப் பிராந்தியம் முழுக்கவும் பனி மூடியிருக்கும். அதனால் மனித நடமாட்டமே இல்லாத அந்தப் பகுதியை ஆண்டுதோறும் காலி செய்து கொண்டு இந்தியா, பாக். இருநாட்டு இராணுவத்தினருமே தமது பிரதான தளமுகாமுக்குத் திரும்பிவிடுவர். குளிர்காலம் முடிந்து கோடை துவங்கும்போது, பனி உருகிவிடும். இருநாட்டு இராணுவமும் திரும்பப்போய் எல்லைச் சாவடிகளை அமைத்துக் கொள்ளும். இந்த வழக்கத்துக்கு மாறாக, திட்டமிட்ட சதிச்செயல் காரணமாக, கோடை துவங்குவதற்கு முன்பாகவே, ஊடுருவல் கும்பலை அனுப்பி பாக். ஆக்கிரமிப்பு நடத்திவிட்டது.

"ஜம்மு-காஷ்மீரின் பிற பிராந்தியகளில் எல்லாம் தீவிரவாதிகள் ஒடுக்கப்பட்டுவிட்ட நிலையில், எல்லையில் புதிய வழியொன்றைத் திறந்து, கூலிப்படையை ஊடுருவவிடும் நோக்கத்துடனே இந்த ஆக்கிரமிப்பு நடந்துள்ளது. நமது சற்றுக் கவனக்குறைவு காரணமாக இது நடந்துவிட்ட போதும், தக்க தருணத்தில் அரசும் இராணுவமும் உறுதியான முடிவு எடுத்து, விமானப்படைத் தாக்குதல் மூலம் எதிரியை நிலைகுலையச் செய்துவிட்டோம். சொற்ப அளவே இழப்புகளைச் சந்தித்துள்ள இந்திய இராணுவம், கூலிப்படையைச் சுற்றி வளைத்து விட்டது. அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கமாட்டோம். இந்திய இராணுவத்தின் முற்றுகையில் சிக்கிய ஊடுருவல்காரர்களை மீட்பதற்கு பாக். படை எல்லைக்கு அப்பால் இருந்து குண்டுவீசும் அதேசமயம், அரசியல் ரீதியில் தஞ்சமடைந்து சமாதானம் பேசத் துடிக்கிறது. சர்வதேச ரீதியில் பாக். தனிமைப்பட்டு போயுள்ளது; இந்தியாவின் நிலைக்கு ஆதரவு பெருகி வருகிறது" என்று இந்திய அரசு பிரச்சாரம் செய்துவருகிறது. "தேசபக்த பம்மாத்துக்காரர்கள்" அனைவரும் பெரும்பாலும் இந்த நிலையை ஆதரிக்கின்றனர்.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் அரசு ஆட்சிக்கு வந்ததும், சீனா - பாக். எதிர்ப்புப் பிரச்சாரத்தில் தீவிரமாக இறங்கி, 'தேசிய' வெறியைக் கிளறிவிட்டு ஆதாயம் தேட முயன்றது. அந்நாடுகளை வம்புக்கிழுத்து, ஆத்திரமூட்டும் வகையில் பேசி, போக்ரன் - II அணுகுண்டு சோதனையை நடத்தியது. "இந்தியா அணு ஆயுத வல்லரசாக மாறுவது என்ற முடிவின் மூலம் இந்தியா - பாக். உறவில் பண்பு ரீதியான ஒரு மாற்றம் நடந்துவிட்டது. குறிப்பாக காஷ்மீர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கண்டுவிட்டோம். இது இந்தப் பிராந்தியத்திலும், உலக அளவிலும் ஒரு பூகோள - யுத்த தந்திர மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்டது" என்று அத்வானி ஆவேசம் பொங்கக் கூறினார். பதிலுக்கு பாக்.கும் அணுகுண்டு சோதனை நடத்தி காஷ்மீரை சர்வதேசப் பிரச்சினையாக்கிவிட, உலக அரங்கில் இந்தியா தனிமைப்பட்டது. ஆனால் வலுவான நிலையிலிருந்து கொண்டு, சமாதான முயற்சியில் ஈடுபடுவதாகக் கூறி, லாகூர் பேருந்து அரசுதந்திர நாடகமாடியது, வாஜ்பாய் அரசு. இவ்வாறு, ஒருபுறம் இராணுவ அமைச்சரும் உள்துறை அமைச்சரும் யுத்தவெறிக் கூச்சலிட, பிரதமர் சமாதான நாடகமாட, "நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை" என்று வழக்கம்போல் கூறிவந்த கும்பல், இப்போது பிரகடனப் படுத்தப்படாத போர் வெடித்ததும் தொடை நடுங்கிப் போகிறார்கள். "தேசபக்தி" பஜனையில் ஒருவரை ஒருவர் விஞ்சிவிடும் போட்டியில் இறங்கியுள்ள ஓட்டுக் கட்சிகளும், பிரச்சார சாதனங்களும் யுத்தவெறி-இராணுவத் தீர்வுக்கு கொம்பு சீவிவிடும் வேலையையே செய்கின்றன.

தொடர்ச்சி 20-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

## நாட்டை அடகு வைக்கப் போவது யார்?

# ''இத்தாலி'' சோனியாவா? ''இந்தியர்'' வாஜ்பாயியா?

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று இன்னும் தெரியவில்லை. அதற்குள் என்ன பெயர் வைப்பது என்று குடும்பத்துக்குள் அடிதடி, பிளவு. இதுதான் இப்போது காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள நிலைமை. வரும் நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கிரசு தனித்து பெரும்பான்மை பெறுமா, அல்லது யாருடனாவது கூட்டுச் சேர்ந்து பெரும்பான்மை பெறமுடியுமா என்று தெரியவில்லை. ஏன், தேர்தல்களுக்கான தேதிகள் கூட இன்னும் அறிவிக்கப்படவில்லை. அதற்குள் யார் பிரதமராவது என்கிற குடுமிப்பிடிச் சண்டை.

காங்கிரசின் மீதுள்ள நேரு-காந்தி குடும்பத்தின் இரும்புப்பிடி, அதிகார - ஆதிக்கம் தளர்வதாக அது அஞ்சும் போதெல்லாம், அக்குடும்பத்துக்கு வெளியே ஒரு மாற்றுத் தலைமை உருவாகிவிடும் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம், அதன் பாசிசப் பதவிவெறி எப்படி வெளிப்படுமோ அதே காட்சிகள் மீண்டும் நடந்துள்ளன. பிரதமர் பதவியின் மீது ''ஆசைப்படும் பாவம்'' செய்வதாகச் சந்தேகிக்கப்படும் தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டு, பிளவு வருவதே காங்கிரசின் கதையாக உள்ளது.

இலவு காத்த கிளி போல, இதோடு நேரு-காந்தி பரம்பரை ஆட்சி முடிந்தது; இனி பிரதமர் பதவி தன்க்கே வருமென்று எதிர்பார்த்து ஏமாந்துபோகும் தலைவர்கள் வெளியேறுவது அல்லது தூக்கியெறியப்படுவது; அவர்களுக்கு எதிராக, நேரு - காந்தி குடும்பத்தினர் போடும் அதிகாரப்பிச்சையைத் தின்று கொழுத்துப்போன முகத் துதிபாடிகளும் எடுபிடிகளும் அடங்கிய கும்பலை ஏவிவிடுவதும்தான் காங்கிரசில் ஏற்படும் பிளவுகளின் வரலாறாக உள்ளது.

பிரதமர் பதவிக்கான காங்கிரசு வேட்பாளராக சோனியா காந்தியை வரும் தேர்தல்களில் முன்னிறுத்துவதற்கு அக்கட்சியின் மூன்று செயற்குழு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தவுடன், வழக்கமாக எல்லா காங்கிரசு பிளவுகளின் போதும் இந்திரா கையாண்ட அதே உத்திகளை சோனியாவும் மேற்கொண்டார். தன்னை விட்டால் இந்தக் கட்சிக்கும், நாட்டுக்கும் வேறு நாதி இல்லை என்ற கருத்தைப் பரப்பும் வகையில், ''இராஜினாமா'' நாடகமாடி மிரட்டிப் பணிய வைப்பதில் இறங்கினார்.

தனக்குப் பதவி - அரசியல் அதிகாரத்தின் மீது எப்போதும் எந்தவித ஆசையும் கிடையாது. அரசியலில் ஈடுபடுவதிலேயே விருப்பம் கிடையாது. கட்சியையும், நாட்டையும் காக்கும் கடமை கருதியே அரசியலில் ஈடுபடவேண்டியுள்ளது. அதனாலேயே தன்னைத் தேடிவரும் பதவியையும் புகழையும் ஏற்க வேண்டியுள்ளது என்பதாக நாடகமாடும் நேரு-இந்திரா குடும்பத்துக்குரிய கைவந்த கலையைக் காட்டினார், சோனியா காந்தி. நேரு-இந்திரா-இராஜீவ் போலவே வெறும் எழுத்தாளர்களாகவும் சமையலறை அதிகாரிகளாகவும் இருந்த ஜார்ஜ், ஆர்.டி.பிரதான், ஆர்.கே. தவான், அரசியல் அனாதைகளான, செல்லாக்காசுகளாகிய பிரணாப்முகர்ஜி, அர்ஜுன் சிங், மன்மோகன் சிங் போன்றவர்களை வைத்து கட்சியையும் ஆட்சியையும் ஆட்டிப் படைப்பதுதான் அவரது அமைப்புமுறையாக உள்ளது.

சோனியா காந்திதான் காங்கிரசின் எதிர்காலப் பிரதமர் என்று முன்னிறுத்தும் தீர்மானத்தை காங்கிரசு செயற்குழுவில் நிறைவேற்றுவதற்கு அவரது எடுபிடிகளும் விசுவாசிகளும் முன்னதாகவே முயன்றனர். அதை சரத் பவார், சங்மா, அன்வர் மூவரும் எதிர்த்தபோது, இந்த நாட்டின் பிரதமராவதற்குத் தனக்கு மட்டுமே தகுதியிருப்பதாக சோனியா வாதிட்டார். இருப்பினும், அத்தீர்மானம் நிறைவேறுவதற்கு வேறு சிலரும் எதிர்ப்புக் காட்டியதையொட்டி அம்முயற்சி கைவிடப்பட்டது.

அதன்பிறகுதான், இந்திரா காந்தி காலத்திலிருந்தே பிரதமர் பதவி மீது குறி வைத்திருக்கும் சரத் பவார் தலைமையில் மூவர் குழு, சோனியா எதிர்ப்பு - நிராகரிப்புக் கடிதத்தை காங்கிரசு செயற்குழுவிற்கு எழுதினர். உடனடியாகவே மூவரையும் கட்சியிலிருந்து நீக்குவது; சோனியாவை பிரதமர் பதவிக்கான காங்கிரசு வேட்பாளராக அறிவிப்பது; இல்லையானால் சோனியா கட்சித் தலைவியாகவும், பிரியங்கா பிரதமராவதற்கும் வழிவகுப்பது வரை நேரு-காந்தி குடும்பத்தின் விசுவாச எடுபிடிகள் வற்புறுத்தினர். ஆனால், காங்கிரசு செயற்குழுவில் அதற்கு ஏகமனதான ஆதரவில்லை என்பதை அறிந்து, சோனியா ஆத்திரத்தின் உச்சிக்கே போய் காங்கிரசு தலைவர் பதவியை ''இராஜினாமா'' செய்தார்.

அவ்வளவுதான்! காங்கிரசு கலாச்சாரம் மேடை ஏறியது. செயற்குழு கூட்டத்தில்

**பிரதமர் பதவியைக் குறி வைத்து சோனியாவிடம் மோதிய சரத் பவார் (நடுவில்) மற்றும் அவரது சகாக்கள் தாரிக் அன்வர் (இடது), சங்மா (வலது)**





படிப்பகம்

www.padippakam.com




சோனியாவை மீண்டும் பதவி ஏற்கக் கோரி, இரத்தத்தால் எழுதி அழைப்பு விடுக்கும் சோனியா விசுவாசிகள்.

இருந்து வெளியேறிய சோனியாவைப் பின் தொடர்ந்த ஒரு பிரமுகர் கும்பல், அவரை மறித்துக் கதறிக்கதறி அழுதது. முன்னாள் காங்கிரசுத் தலைவர் சீதாராம் கேசரி கண்களில் கண்ணீர் பெருக சோனியாவிடம் மன்றாடினார். அடுத்தடுத்த நாட்களில் சோனியா வீட்டின் முன்பு எல்லாவகை கேலிக்கூத்துகளும் நடந்தன. காங்கிரசுக்கு ஏற்பட்ட பின்னடைவையே சோனியா விசுவாச - அனுதாப அலையைக் கிளப்பும் நடவடிக்கைகளாக மாற்றும் செயல்களில் ஈடுபட்டனர். இந்திரா காலத்தில் இருந்து ஒவ்வொரு கட்சிப் பிளவுகளின் போதும் நடப்பதைப் போல, அரியானா, இராசஸ்தான், உத்திரப் பிரதேசத்தில் இருந்து லாரி லாரியாக கூலிக்கு ஆள்சேர்த்து சோனியா வீட்டுவாசலில் குவிக்கப்பட்டது. ஒரு புறம் கும்பல் கும்பலாக ஒப்பாரி வைத்து அழுதனர். மறுபுறம் மறியல், தீக்குளிப்பு முயற்சி, இரத்தக் கையெழுத்துப் போட்ட கடிதங்கள், சாகும்வரை உண்ணாவிரதம் என எல்லாவகை பிரச்சாரக் கூத்துகளும் நடந்தன.

காங்கிரசின் நான்கு மாநில முதல்வர்கள், கட்சியின் துணைத் தலைவர்கள், பொது - துணை - இணைச் செயலாளர்கள், மாநிலத் தலைவர்கள் பதவிகளைத் துறந்தனர். இவர்கள் எல்லாம் நியமனத் தலைவர்கள் தாம்; கட்சித் தலைவர் பதவி விலகினால் இவர்களின் பதவியும் தானே பறிபோய்விடும். பிறகு எதற்கு பதவி விலகல் நாடகம்? இதனால் எல்லாம் சோனியா மீது அனுதாபம் வருகிறதோ இல்லையோ, அதிகாரமும், நேரு-காந்தி குடும்ப பரம்பரைத் தலைமையும் இல்லாமல்போனால் காங்கிரசு அழிந்துபோய்விடும் என்கிற பீதி நன்கு வெளிப்பட்டது.

ஆனால், சோனியா மசியவில்லை. ''என்னுடைய பூர்வீகம், இந்நாட்டின் மீதுள்ள எனது விசுவாசத்தைக் கேள்விக்குள்ளாக்கும்போது அவர்கள் எப்படி பொறுமையாக இருக்கலாம்'' அவர்களுக்காக நான் பாடுபடவேண்டும்; தேர்தல்களில் வெற்றிபெற உதவவேண்டும்; ஆனால், பிரதமர் பதவி ஏற்கக்கூடாதா? நான் என்ன தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கேட்டேனா?'' என்று கேட்டு, பிற காங்கிரசுத் தலைவர்கள் மீது பாய்ந்தார்.

சோனியா மீது தமக்குள்ள விசுவாசம் கேள்விக்குள்ளாக்கப்படுவது கண்டு பொங்கி எழுந்தார்கள், காங்கிரசுக்காரர்கள். பதிலுக்கு சரத்பவார், சங்மா, அன்வர் மீது பாய்ந்தனர். ''கட்சியின் துரோகிகள்; பா.ஜ.க வோடு இரகசியக் கூட்டு வைத்துக் கொண்டுள்ள சதிகாரர்கள்'' என்கிற பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். கட்சியிலிருந்து உடனடியாக மூவரையும் நீக்கிவிட்டு, ''சோனியாவை விட்டால் வேறு கதி இல்லை'' என்பதைக் காட்டுவதற்காக அனைத்திந்திய காங்கிரசு கமிட்டியைக் கூட்டி, கட்சியே அவர் காலில் விழுந்த பிறகே மீண்டும் தலைவர் பொறுப்பை ஏற்றார்.

★☆★

''இத்தாலி நாட்டுக்காரியான சோனியா இந்திய நாட்டுக்குப் பிரதமராகலாமா? ராம ராஜ்யமா, ரோம் ராஜ்யமா?'' என்கிற பிரச்சினையை ஒருவிதத் தயக்கத்தோடு பாரதீய ஜனதா கட்சி கடந்த சில ஆண்டுகளாகவே எழுப்பி வருகிறது. அதை ஏற்றுக் கொள்ளலாமா, வேண்டாமா என்கிற தயக்கத்தினால் அல்ல; இந்தப் பிரச்சினை சோனியா மீது அனுதாபத்தையும், அதனால் தனக்கு எதிரான விளைவையும் ஏற்படுத்திவிடுமோ என்கிற அச்சத்தினால்தான் அந்தத் தயக்கம். எப்படியோ, காங்கிரசிலிருந்தே ஒரு பிரிவினர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருப்பது, பா.ஜ.க - ஆர். எஸ்.எஸ். சிவசேனா போன்ற வகுப்புவாத பாசிஸ்டுகளுக்கு வசதியாகி விட்டது.

இந்தப் பிரச்சினையில் பா.ஜ.க-ஆர்.எஸ்.எஸ் கும்பலுக்கும் சரத்பவார் தலைமையிலான மூவர் குழுவுக்கும் அடியோடு வேறுபாடு கிடையாது என்று சொல்லிவிட முடியாது. சிவசேனா - பால் தாக்கரேயுடன் நெருங்கிய இரகசியக் கூட்டாளியான சரத் பவாருக்கு ''இந்துத்துவா'' கொள்கையில் முற்றாக உடன்பாடில்லை என்று கூறிவிட முடியாது. ஏன், சரத்பவார் மட்டுமல்ல, சோனியாவே கூட நேரு-காந்தி பரம்பரையின் அடியொற்றி, இந்து - இந்தி - இந்துத்துவாவின் மறைமுக ஆதரவாளர்கள் தான். இது ஒருபுறம் இருக்க, அந்நிய நாட்டுப் பூர்வகுடியான சோனியா காங்கிரசுக்குத் தலைமையேற்பதில் மாறுபட்ட கருத்து இல்லை; பிரதமர், அரசுத்தலைவர், அரசுத் துணைத்தலைவர் போன்ற மேல்மட்ட - அதிகாரபூர்வ அரசுப் பதவிகள் வகிப்பது கூடாது என்பதுதான் சரத் பவார் தலைமையிலான மூவர் குழுவின் நிலைப்பாடு. ஆகவே, இது காங்கிரசுக்குள் நடக்கும் பதவிச்சண்டைக்கு, தமது சுயநலனுக்கு, ஒரு கொள்கை - கோட்பாடு சாயம்பூசும் முயற்சிதான்.

வெளிநாட்டை மட்டுமல்ல, இந்த நாட்டையே கூட பூர்வகுடியாகக் கொண்டுள்ள இசுலாமியர்கள், கிறித்தவர்களைக் கூட பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ் கும்பல் இரண்டாம்தரக் குடிகளாக அடக்கிவைக்க வேண்டும் என்கிறது. மூன்று தலைமுறைகளாக வெளிநாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்கள், இந்துக்களானால், இந்த நாட்டிற்கே வந்து குடியேறாதவர்களுக்குக் கூட, வெளிநாட்டுக் குடியுரிமையுடன் அங்கே வாழ்பவர்களுக்குக்கூட இந்தியக் குடியுரிமை வழங்க ஆலோசித்து வருகிறது, பா.ஜ.க அரசு. அவர்களுக்கு இந்தியத் தேர்தல்களில் ஓட்டளிக்கும் உரிமைகூடத் தரத் தயாராக உள்ளது. ஆக, தனக்குப் போட்டியாகவும், இந்து அல்லாதவரும்


படிப்பகம்

### ''பகுத்தறிவாளரே!'' ''புரட்சியாளரே!'' எது இந்தியப் பண்பாடு?

பேராசிரியரும், நடிகருமான பெரியார்தாசனும் சி.பி.எம். கட்சியின் எழுத்தாளர் சங்கத் தலைவர் செந்தில்நாதனும் ஒரு விவாதத்தில் கலந்து கொண்டனர். அதில் பா.ஜ.க.வின் குரலாக ஒலித்த பெரியார்தாசன், ''சட்டப்படி சோனியா, இந்தியரா? இல்லையா? என்பது இருக்கட்டும். அவருடைய தன்மைகளில் அவர் இந்தியரா, இல்லையா? என்று பார்க்க வேண்டும். கலாச்சாரத்தால், பண்பாட்டால், மொழியால் சோனியா அந்நியரா? இல்லையா? என்று பார்க்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

அதற்குப் பதில் கூறும் முகமாக, ''நம்மவர்களே அந்நிய உடையில், பண்பாட்டில் கரைந்து போய்க் கொண்டிருக்கிற சூழலில், சோனியா புடவை கட்டிக் கொண்டுதான் வெளிநாட்டுக்கும் போகிறார் இந்திய மொழியைத்தான் பேசுகிறார். தன்னை எல்லா வகையிலும் இந்தியக் குடிமகளாகக் காட்டிக் கொள்கிற முயற்சியை அவர் மேற்கொண்டிருக்கிறபோது அவரை எளிதில் புறந்தள்ளிவிட முடியாதல்லவா?'' என்று கொக்கி போட்டார் செந்தில்நாதன்.

இவர்கள் இருவரும் எதிரெதிர் முகாமில் நின்று பேசினாலும், இந்தியப் பண்பாடு பற்றிய ஆராய்ச்சியில் ஒரே வாடை - ''இந்துத்துவா'' வாடை - அடிக்கவில்லையா?

---

பிரதமராகிவிடக் கூடாது என்கிற இந்துமத வெறியின் காரணமாகவே சோனியா எதிர்ப்பு பிரச்சாரம் செய்கிறது, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல். எனவேதான், சரத் பவார் தலைமையிலான மூவர் குழுவைப் போன்றதொரு சட்டப் பாதுகாப்புக்கான யோசனையைக் கூட பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் முன்வைக்கவில்லை.

ஆனால், இவர்கள் அனைவருமே இப்போது எழுப்பும் பிரச்சினை இதுதான். ''வெளிநாட்டில் பிறந்த, வெளிநாட்டுப் பூர்வ குடியினரான ஒருவர், இந்திய நாட்டுக் குடியுரிமை பெற்றாலும், இந்திய அரசில் உயர் பதவி வகிக்கக்கூடாது.'' இது அடிப்படைக் காரணம்; இதற்குத் துணையாக, குறிப்பாக, சோனியா காந்திக்கு அதற்குரிய தகுதிகள் கிடையாது என்பதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன.

இராஜீவ் காந்தியை மணந்த பிறகு, அவர் அரசியலில் நுழைந்து பிரதமராகும் வாய்ப்பு கண்ணில் தெரியும் வரை, இந்தியக் குடிமகளாக குடியுரிமைக்குப் பதிவு செய்ய சோனியா முயலவில்லை. இப்போதும் கூட இத்தாலி நாட்டுக் குடியுரிமையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். இந்திரா தேர்தலில் தோற்றவுடன் இத்தாலி தூதரகத்தில் தஞ்சமடைந்து, வீடு திரும்ப மறுத்தார். இத்தாலிய தரகு வியாபாரி குவாட்ரோச்சி, போஃபர்ஸ் ஊழல் போன்ற தொடர்புகள் சோனியாவுக்கு இருக்கிறது. இந்திய நாட்டின் பாரம்பரியம், பண்பாடு அறியாதவர் போன்ற காரணங்கள் கூறப்படுகின்றன.

சாதாரணமான ஒருவருக்குக் குடியுரிமை வழங்கப்படும்போதே அவரது தகுதிகள் சோதனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இந்த நாட்டுக்கு துரோகமிழைப்பார் என்று சந்தேகிக்கப்படுபவர் எப்படிக் குடியுரிமை பெற்றார்? இலஞ்ச - ஊழல் மூலமே, அதிகார முறைகேடாக - பிரதமரின் மருமகள், மனைவி என்பதற்காக விதிமுறைகளுக்கு மாறாக குடியுரிமை வழங்கப்பட்டிருந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினைகள் குறிந்து சரத் பவார் தலைமையிலான மூவர் குழு எதுவும் பேசவில்லை. ஆனால், குடியுரிமை பெற்றவருக்குரிய சட்டபூர்வமான உரிமைகளை மறுப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

★☆★

பா.ஜ.க. வாகட்டும், சரத் பவார் தலைமையிலான மூவர் குழுவாகட்டும், சோனியா விசுவாசிகளான காங்கிரஸ் ஆகட்டும், வேறு எந்த ஓட்டுக்கட்சிகள், மக்கள் திரள் செய்தித் தொடர்பு சாதனங்களாகட்டும் இவர்கள் அனைவருமே தேசிய நலன்கள், தேசியம் என்பதற்கே தவறான ஒரு கருத்தை உருவாக்கிப் பிரச்சாரம் செய்கின்றனர்.

''98 கோடி மக்களையும், கல்வி, திறமை, வல்லமையில் பெருஞ்செல்வத்தையும் கொண்டுள்ள ஒரு நாடாகிய இந்தியா, ஒரு இந்தியரல்லாத வரை, இந்திய மண்ணில் பிறக்காதவரை இதன் அரசாங்கத் தலைவராக ஏற்பது சாத்தியமில்லை.''

''இந்தியாவைப் போன்ற சிக்கலான, பன்முகமான பிரச்சினைகளை உலகின் வேறெந்த அரசாங்கமும் சந்தித்ததில்லை. இந்த நாட்டை ஆளும் எவரும் பொது வாழ்வு பற்றிய புரிதலும் அனுபவமும் பெருமளவு பெற்றிருக்க வேண்டும். எனவே தான், உயர்ந்த பதவிகளை வகிக்க விரும்பும் எவரும் கீழிருந்து பணியாற்றி மேலே வரவேண்டும் என்று கட்சியின் நிறுவனர்கள் வலியுறுத்தினர்.''

''நமது ஊக்கமளிக்கும் சக்தி, நமது ஆன்மா, நமது மதிப்பு-மரியாதை, நமது பெருமை, நமது கௌரவம் நமது மண்ணில் வேர்விட்டிருக்கிறது. அவையெல்லாம் இந்த மண்ணுக்குரியதாக இருக்க வேண்டும்'' என்பதை அடிப்படையாகக் கொண்ட வாதத்தையே சரத்பவார் தலைமையிலான மூவர் குழு முன்வைக்கிறது. இதோடு, ''ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பண்பாட்டு, மரபு வரலாற்றைக் கொண்ட இந்த நாடு ஒரு பிரதமரைத் தேடிக் கொள்வது உட்பட எல்லா அர்த்தத்திலும் சுயதேவையைத் தானே நிறைவு செய்து கொள்ள முடியும்'' என்கிற பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். குரலை எதிரொலிக்கிறது.

இத்தகைய கண்ணோட்டம் இந்து - இந்தி - இந்தியா என்ற நோக்கில், இந்துத்துவாவை அடிப்படையாகக் கொண்ட ''இந்திய தேசியத்தை''தான் குறிக்கிறது. இது, இந்திய நாடு பல்வேறு தேசிய இனங்களையும், மொழி, பண்பாடு - வரலாறுகளையும் உள்ளடக்கியது என்பதை ஏற்க மறுத்துவிட்டு, அவற்றை நசுக்கிவிட்டு, ஏக இந்தியா, அகன்ற இந்தியா, அதன் ஒருமைப்பாடு, நலன்கள் ஆகியவற்றை முன்னிறுத்துகிறது.

சாதிய, வர்க்க ரீதியிலான பழைய நிலப்பிரத்துவ பொருளாதார, சமூக உறவுகளைத் தகர்த்து, அந்தந்த இனங்களின் தேசியம் வளர்ச்சி பெறுவதைத் தடுத்துக் கொண்டே, இந்திய தேசிய நலன், பாரம்பரியம், பண்பாடு பற்றிப் பேசுவது பிற்போக்குத்தனமான பித்தலாட்டமாகும்.

அண்டை நாடுகள் மீதான பிராந்திய ஆதிக்கம், அகண்ட பாரத - விரிவாக்க நோக்கங்களை முன்னிறுத்தி தேசியவெறி, யுத்த வெறியைத் தூண்டும் வகையில் செயல்படும் பாசிச தேசியவாதம் இறுதியில் இந்த நாட்டு மக்களையே அடக்கி ஒடுக்குவதாகத் திருப்பப்படும்.

உலகமயமாக்கம், தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கை, சீர்திருத்தங்கள் மூலம் அந்நிய மேல்நிலை வல்லரசுகளும் அவற்றின் ஏகபோக கூட்டுப்பங்கு தொழிற்கழகங்களும் இந்த நாட்டைச் சூறையாடுவதற்கு எந்தவிதத் தடையுமின்றி அகலக் கதவு திறந்து விட்டுக் கொண்டே, தேசிய நலன்கள் குறித்துப் பேசுவதுதான் உண்மையில் தேசத்துரோகமாகும்.

ஆக, இந்திய மண்ணில் பிறந்தவரா, அந்நியமண்ணில் பிறந்தவரா என்பதல்ல பிரச்சினை. இந்திரா - ராஜீவ் - நரசிம்மராவ் ஆகிய காங்கிரசு பிரதமர்களாகட்டும், வி.பி.சிங் - சந்திரசேகர் - தேவகவுடா - குஜரால் - வாஜ்பாய் ஆகிய மற்றவர்களாகட்டும், உண்மையில் யாராவது சுதேசிகளாக நடந்து கொண்டதாகச் சான்று காட்ட முடியுமா? இவர்கள் எல்லாம் ''இந்த மண்ணின் மைந்தர்களாக இருந்தபோதும், இந்த நாட்டின் ''தேசிய'' வளர்ச்சிக்குத் தடையாக விளங்கும் பழைய நிலப்பிரபுத்துவ - பிற்போக்கு சாதிய - வர்க்க சமூகப் பொருளாதார உறவுகளைக் கட்டிக் காத்தவர்கள் தானே! அந்நிய ஏகபோக ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகள் இந்த நாட்டைக் கொள்ளையிடவும் மறுகாலனி ஆதிக்கத்தை நிறுவவும் துணை போனவர்கள் தானே! இதே காரியங்களைத் தான் அந்நிய மண்ணில் பிறந்த சோனியாவும் செய்யப் போகிறார்! ஆகவே, இப்போதுள்ள பிரச்சினை, எப்படியிருந்தாலும் நடப்பது இந்திய நாட்டின் ''தேசிய'' நலன்களுக்கு எதிரான துரோகம் தான். அதற்குத் தலைமையேற்பது இந்தியப் பூர்வகுடியா? இத்தாலியப் பூர்வகுடியா என்பதுதான்!

• ஆர்.கே.

www.padippakam.com



# தி.மு.க.வின் ஊழல் எதிர்ப்பு நாடகம் - ஒரு மோசடியே!

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே உள்ளது கௌகா பேட்டை கிராமம். இக்கிராமத்தில் சுமார் 150 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வறுமையோடு போராடி வருகின்றனர். இங்கு புதிய ஜனநாயகம் பத்திரிகை வாசகர்கள் 15 பேர் தொடர்ந்து அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இக்கிராமத்துக்கு 10 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை யார் யாருக்கு அளிப்பது என்ற பட்டியலைப் பரிந்துரைக்குமாறும் வார்டு உறுப்பினர்களிடம் ஊராட்சித் தலைவர் அறிவித்தார். வார்டு உறுப்பினர்களில் ஒருவர், புதிய ஜனநாயகம் வாசகரின் துணைவியாவார். அவர் ஊர் மக்களைக் கூட்டி, அவர்களது கருத்துப்படி 10 பேர் கொண்ட பட்டியலைத் தயாரித்து முறைப்படி கொடுத்துள்ளார்.

இதே ஊரில் தி.மு.க.வைச் சேர்ந்த ஜெபமணி என்பவன், தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்படுவதற்கு முன்பே 10 பேரிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு பொய்யான வாக்குறுதியைக் கொடுத்துள்ளான். அவனது மோசடிகள் அம்பலமானதால், வார்டு உறுப்பினரால் தனக்கு நெருக்கடி ஏற்படும் என்கிற ஆத்திரத்தில், ஊராட்சி மன்ற அலுவலகத்திலேயே அவரையும் உடன் சென்ற புதிய ஜனநாயகம் வாசகத் தோழர்களையும் நாக்கூசும் கீழ்த்தரமான சொற்களால் திட்டியுள்ளான். இதை எதிர்த்து தோழர்கள் பேச முற்பட்டபோது, அது கைகலப்பில் போய் முடிந்தது. இதுபற்றி போலீசிடம் முறையிட்டு பு.ஜ. தோழர்கள் 9 பேர் மீது அவன் பொய் வழக்கும் பதிவு செய்துள்ளான்.

பின்னர், மூன்று ரவுடிகளை அரிவாள், கட்டைகள் போன்ற ஆயுதங்களோடு ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு தோழர்களின் வீடுகளை அடையாளம் காட்டி, தோழர்களைத் தாக்குமாறும் பெண்களை இழிவுபடுத்துமாறும் ஏவினான். இதனை அறிந்த ஊர் மக்கள் தோழர்களோடு திரண்டு அவர்களைச் சுற்றி வளைத்தபோது, இரண்டு ரவுடிகள் மட்டும் சிக்கிக் கொண்டனர். அவர்களை மரத்தில் கட்டி வைத்து விசாரித்து ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதி வாங்கிய ஊர் மக்கள், பின்னர் அவர்களைப் போலீசிடம் ஒப்படைத்தனர். தப்பியோடிய ஜெபமணியும் இன்னொரு ரவடியும் ஊர்ப்பக்கம் திரும்பவேயில்லை.

பின்னர் ஆளுங்கட்சியிடமிருந்து நிர்பந்தம் வருவதாக கூறிய போலீசார் ரவுடிகள் இருவர் மீதும், பு.ஜ. தோழர்கள் நால்வர் மீதும் வழக்கு தொடுத்துக் கைது செய்தனர். தோழர்கள் தற்போது பிணையில் வெளிவந்துள்ளனர்.

ஜெபமணியின் இந்த ஊழல் - ரவுடித்தனத்தை அம்பலப்படுத்தி ஊர் மக்கள் சார்பாக இப்பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. தோழர்கள் வழக்குச் செலவுக்கு ஊர் மக்களே தமது குறைந்த வருமானத்திலிருந்து நன்கொடைகள் கொடுத்து உதவினர். பு.ஜ. தோழர்கள் மீது உறுதியான நம்பிக்கை வைத்து எதையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளனர். தி.மு.க.வின் ஊழல் எதிர்ப்பு நாடகம் எவ்வளவு மோசடியானது என்பதை, ஜெபமணி போன்ற கீழ்மட்ட அணிகளின் ஊழலும் ரவுடித்தனமும் பொங்கி வழியும் இதுபோன்ற சம்பவங்களே நிரூபித்துக் காட்டுகின்றன.

தகவல்: பு.ஜ. வாசகர்கள்,
கௌகாப்பட்டு

# அரசு உதவித் தொகை கோரும் உரிமை தாழ்த்தப்பட்டோருக்குக் கிடையாதா?

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள புது வெள்ளாரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அய்யாக்கண்ணு, பெருவளப்பூர் கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமியின் மகளைத் திருமணம் செய்து கொண்டபொழுது, தி.மு.க.வைச் சேர்ந்த பெருவளப்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் வி. செல்வராஜ், அரசிடமிருந்து திருமண உதவித் தொகை வாங்கித் தருவதாகக் கூறி, மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டாரிடமிருந்து ரூ. 2300/- இலஞ்சமாக வாங்கிக் கொண்டார்.

கடந்த ஒரு வருடமாக, ஏதாவது சாக்கு போக்கு சொல்லி திருமண உதவித் தொகையை வாங்கித் தராமல் தட்டிக் கழித்து வந்த செல்வராஜ், உண்மையிலேயே அவர்களின் மனுவை அரசாங்கத்திற்கு அனுப்பவில்லை. அய்யாக்கண்ணு செல்வராஜின் மோசடி பற்றி விசாரிக்குமாறு, முதல்வர் செல் பிரிவுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனு கொடுத்தார். இதனடிப்படையில் புள்ளம்பாடி ஒன்றிய அலுவலர், செல்வராஜின் மோசடி குறித்து விசாரணை நடத்தினார்.

"தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தவனுக்கு இவ்வளவு திமிரா?" என மேல்சாதி வெறியோடு உறுமிக் கொண்டிருந்த செல்வராஜின் கைத்தடிகளான த.மா.கா.வைச் சேர்ந்த வார்டு உறுப்பினர் ஜெகதீசன், தவசி சாமிநாதன், கொட்டேரி சந்திரன் - இம்மூவரும் 5.2.99 அன்று அய்யாக்கண்ணுவைத் தாக்கினர்.

இதன்பின், 8.2.99 அன்று இரவு அய்யாக்கண்ணுவின் அண்ணன் "போலீஸ்" என்பவரை, ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ், "பறப்பயலுக்கு திருமண உதவி கேட்குதா?" எனச் சாதியைச் சொல்லி திட்டியும், அவமானப்படுத்தியும் தாக்கினார்.

மறுநாள், விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில் 300-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டோர் அணி திரண்டு, அய்யாக்கண்ணு - போலீசைத் தாக்கிய சாதி வெறியர்களை, பொது மக்கள் மத்தியில் மன்னிப்பு கேட்கக் கூறி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால், செல்வராஜ் கும்பலோ மன்னிப்பு கேட்க முடியாது எனத் திமிராகக் கூறி விடவே, அச்சாதி வெறியர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய, திருச்சியிலும், சிறுகனூர் போலீசு நிலையத்திலும் புகார் மனு கொடுக்கப்பட்டது.

மேல்சாதியைச் சேர்ந்த கிராமப் பொது மக்களை, சாதி உணர்வைத் தூண்டிவிட்டு தங்கள் பக்கம் வென்றெடுக்க செல்வராஜ் கும்பல் செய்த முயற்சியை, செல்வராஜின் ஊழல்களை அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு முறியடித்தது வி.வி.மு. அதிகார வர்க்கம் சாதி வெறியர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வதால், "அமைதி பேச்சு வார்த்தை கூட்டம்" திட்டமிட்டபடி நடைபெறவில்லை. எனினும், செல்வராஜ் கும்பலின் மீது தொடுக்கப்பட்ட வழக்கின் மீதான விசாரணை தொடங்கி நடந்து வருகிறது.

சாதி வெறியனும், ஊழல் பேர்வழியுமான செல்வராஜை எதிர்த்த வி.வி.மு.வின் போராட்டத்திற்கு, தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமின்றி, செல்வராஜின் ஊழல் - மோசடிகளைப் புரிந்து கொண்ட பிற சாதி மக்களும் ஆதரவளித்து வருகின்றனர்.

தகவல்:
வி.வி.மு.,
பெருவளப்பூர்.



படிப்பகம்

www.padippakam.com

# கோயில் நிலங்கள் யாருக்குச் சொந்தம்?

# விவசாயிகளுக்கா? மடாதிபதிகளுக்கா?

குப்புறத் தள்ளிவிட்டு குழியையும் பறித்த கதையாக, விவசாயிகளை வஞ்சித்து வரும் தி.மு.க. அரசு, அதுவும் போதாதென்று இப்போது முதுகில் குத்தவும் கிளம்பிவிட்டது. கோயில் நிலங்களில் சாகுபடி செய்துவரும் குத்தகை விவசாயிகள் கடனாளியாகித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், குத்தகை பாக்கியைச் செலுத்தத் தவறினால் அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதோடு, குத்தகை நிலத்தையும் பறித்துக் கொள்ளப் போவதாக அண்மையில் தமிழக அரசு அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் தமிழக சட்டப் பேரவையில் இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, "உழுது கொண்டிருக்கிற குத்தகை விவசாயிகளுக்கே கோயில் நிலத்தைச் சொந்தமாக்கிவிட வேண்டும்" என்று வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினரான சிவபுண்ணியம் வலியுறுத்திப் பேசினார்.

இதற்குப் பதிலளித்த தமிழக முதல்வர், "நான்கு அல்லது ஐந்து தவணைகளில் குத்தகைகாரர்கள் நிலத்துக்கு உரிய தொகையைச் செலுத்தி விட வேண்டும்; அனைத்துக் கட்சிகளும் இதற்கு உத்திரவாதம் அளித்தால் இத்திட்டத்தைப் பற்றி, கொள்கை அறிவிப்பு பற்றி பரிசீலித்து முடிவு செய்யலாம்" என்றார்.

கோயில்கள், மடங்களுக்குச் சொந்தமான இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் குத்தகை விவசாயிகளிடமே ஒப்படைப்பது; நிலத்திற்கான தொகையைத் தவணை முறையில் பெறுவது; அதை வங்கிகளில் முதலீடு செய்து, கிடைக்கும் வட்டியைக் கொண்டு கோயில் நிர்வாகத்தை நடத்துவது என்று வலது கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆலோசனை கூற, அதையொட்டிய விவாதமும் சட்டப் பேரவையில் நடந்தது.

மறுநாளே, இந்து முன்னணித் தலைவர் இராம. கோபாலன் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். "ஆண்டவனின் சொத்தை - கோயில் சொத்தை விற்க யாருக்கும் உரிமை கிடையாது. குத்தகை விவசாயிகள் கோயில்களுக்கு முறையாக பாக்கியைச் செலுத்துவதில்லை. அதை வசூலிக்க முயற்சிப்பதை விடுத்து, கோயில் சொத்தை விற்க ஏற்பாடு செய்வது இந்துக்களின் உணர்வைப் புண்படுத்தும் செயலாகும். கம்யூனிஸ்டுகளின் சதி வலையில் முதல்வர் விழுந்துவிடக் கூடாது" என்று எச்சரித்தார். திராவிட இயக்கத்தில் வளர்ந்து வந்ததாகக் கூறிக் கொள்ளும் முன்னாள் அமைச்சரான க. இராசாராம், "சர்ச்சுகளுக்கும் வக்ஃபுகளுக்கும் சொந்தமான நிலங்களில் அரசாங்கத்தைக் கைவைக்கச் சொல்லி கம்யூனிஸ்டுகள் பேசுவார்களா? கோயில் நிலங்கள்தான் கண்ணுக்குத் தெரிகிறதா?" என்று இராம. கோபாலனுடன் சேர்ந்து கொண்டு ஆத்திரத்தோடு கேட்டுள்ளார். இதற்குப் பெரியாரையும் கேடாகச் சாட்சிக்கு இழுத்துள்ளார்.

இந்த சலசலப்புகளைக் கண்டு பீதியடைந்த முதல்வர், "இப்பிரச்சினை பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதே தவிர, இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை" என்று சட்டப் பேரவையில் அறிவித்தார். ஆனால், அடுத்த சில நாட்களிலேயே கோயில் மடாதிபதிகள், இந்து சனாதனவாதிகளின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தி, பாக்கியை செலுத்தத் தவறிய குத்தகை விவசாயிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், குத்தகைக்கு விடப்பட்டுள்ள கோயில் நிலத்தை விவசாயிகளிடமிருந்து எவ்வித நிவாரணமுமின்றி மீட்டுக் கொள்ளவும் வருவாய்த் துறைக்கு வரம்பற்ற அதிகாரம் வழங்கும் கருப்புச் சட்டத்தை தமிழக அரசு இயற்றியது.

★☆★

தமிழகத்தில் கோயில்கள் மற்றும் மடங்களுக்குச் சொந்தமாக மொத்தம் 4,91,417 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றில் 2,70,600 ஏக்கர் நிலங்கள் மடங்களுக்குச் சொந்தமாக உள்ளன. குறிப்பாக, தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்களும், அக்கோயில் மடமும் தலா 20,000 ஏக்கருக்கும் மேலாக வைத்துள்ளன. இவை தவிர, சத்திர நிர்வாகங்களுக்குப் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன. தேவாலயங்கள், வக்ஃபு வாரியங்கள், கோயில்கள், மடங்கள், சத்திரங்களுக்குச் சொந்தமாக உள்ள பல இலட்சக் கணக்கான ஏக்கர் நஞ்சை, புஞ்சை, மானாவாரி மற்றும் நகர்ப்புற நிலங்கள் அனைத்துக்கும் நில உச்சவரம்புச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கோயில்கள், மடங்களுக்குச் சொந்தமாக உள்ள பல இலட்சக்கணக்கான நிலங்கள் அனைத்தும் பன்நெடுங் காலத்துக்கு முன்பு மன்னர்களால் தானமாக அளிக்கப்பட்டவையாகும். இந்நிலங்களில் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் விவசாயிகள் குத்தகை சாகுபடி செய்து வருகின்றனர். மொத்த விளைச்சலில் நாளில் ஒரு பங்கை குத்தகையாகச் செலுத்த வேண்டும் என்பது விதி. ஆனால், இயற்கைப் பாதிப்பினாலும், பயிர்ச் செலவு அதிகரித்து விட்டதாலும், வேளாண் பொருட்களுக்குக் கட்டுபடியான விலை கிடைக்காததாலும் குத்தகை விவசாயிகள் கடனாளிகளாகப் பரிதவிப்பதால், அவர்களால் குத்தகையை முறையாகச் செலுத்த முடிவதில்லை. ஆனாலும், குத்தகைத் தொகையைக் கட்டாயமாக வசூலிப்பதற்கென்றே 12 வருவாய் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில்தான் கோயில் நிலங்களை குத்தகை விவசாயிகளுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று போலி கம்யூனிஸ்டுகள் சட்டப் பேரவையில் கோரிக்கை வைத்தனர். இதைப் பரிசீலிப்பதாகக் கூறிய கருணாநிதியோ, பாக்கியை செலுத்த முடியாத குத்தகை விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்றும் கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்.

சொந்த நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளே, வங்கிகளில் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கூடச் செலுத்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது, குத்தகை விவசாயிகளால் மட்டும் எப்படி பாக்கியைச் செலுத்த முடியும்? கோயில் நிலங்களை விளையும் காலத்திலும் விளையாத காலத்திலும் நிர்வாக அதிகாரிகளோ, அறநிலையத் துறையினரோ, வருவாய்த் துறையினரோ நேரில் சென்று பார்த்ததுண்டா? இந்நிலங்களைப் பராமரிக்கவும் மேம்படுத்தவும் உருப்படியான பணிகள் ஏதாவது செய்ததுண்டா? எதுவும் கிடையாது.

எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது, கோயில்களுக்கும் மடங்களுக்கும் எதற்காக சொத்து என்பதுதான்! பன்நெடுங்காலத்துக்கு முன்பாக விவசாயிகளை ஒடுக்கிச் சுரண்டி ஆட்சி செய்த நிலப்பிரபுத்துவ அரசர்கள், கோயில்களுக்கும் மடங்களுக்கும் தானமாகக் கொடுத்த சொத்துக்கு நிலஉச்ச வரம்புச் சட்டத்தில் விலக்கு அளித்து, மடாதிபதிகளும், அறங்காவலர்கள் என்ற பெயரில் உள்ளூர் ஆதிக்க சக்திகளும், நிர்வாக அதிகாரிகளும் தின்று கொழுக்க அனுமதிப்பது எந்த வகையில் நியாயமாகும்? தங்கக் காசுக் குளியல் (கனகாபிஷேகம்), அறுசுவை உணவு, எடுபிடி ஏவலாட்கள் என சுக போக - வக்கிர வாழ்வு நடத்திக் கொண்டு கொழுத்துத் திரியும் மடாதிபதிகள், கோயில் சொத்தை அனுபவிப்பதைத் தவிர வேறென்ன நடந்துள்ளது? எந்தக் கோயிலில் - மடத்தில் நிர்வாகிகளும் அறங்காவலர்களும் முறையாக கணக்கு வைத்துச் சட்டப்படி நடக்கிறார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்தது போதாது என்று இக்கும்பல்கள், கோயில் சிலைகளைக் கடத்தி விற்றதில்லையா? நகைகளைக் கொள்ளையடிக்கவில்லையா? தஞ்சை மாவட்டம் சிவபுரம் கோயில் மூலவிக்கிரகமான நடராஜர் சிலை அமெரிக்காவுக்கு கடத்திச் சென்று விற்கப்பட்டு, உலகப் பெருநகர பொருட்காட்சிகளில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டதே, விவசாயிகளா இதைச் செய்தார்கள்?

கோயில் சொத்து தாவா வழக்கொன்றில் கடவுளை வாதியாக - மனிதனாக கருதுவதாக உச்சநீதி மன்றம் அண்மையில் குறிப்பிட்டுள்ளது. இதன்படி அந்தக் கடவுளுக்கு நிலஉச்ச வரம்புச் சட்டப்படி 15 தர ஏக்கர் நிலம்தான் தரப்பட வேண்டும். ஆனால், நிலஉச்ச வரம்புச் சட்டத்தில் விலக்களித்து இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தைக் கடவுளின் பெயரால் மடாதிபதிகளும் ஆதிக்க சக்திகளும் அனுபவிக்கத் துணை போவது எந்த வகையில் நியாயமாகும்?

ஆகவே தேவாலயங்கள், மசூதிகள், கோயில்கள், மடங்கள், சத்திரங்கள், அறக்கட்டளைகளிடம் குவிந்துள்ள பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை நட்டஈடு எதுவுமின்றி பறிமுதல் செய்து, பரம்பரையாகச் சாகுபடி செய்துவரும் குத்தகை விவசாயிகளிடம் விநியோகிப்பது ஒன்றே நியாயமான, புரட்சிகரமான தீர்வாகும்.

இப்படிச் செய்தால் கோயில்களில் விளக்கேற்ற என்ன செய்வது? திருவிழாக்களை எப்படி நடத்துவது? அர்ச்சகர்கள், ஓதுவார்கள், இசைக் கலைஞர்கள், தண்டோரா அடிப்போர், தீவட்டிக்காரர்கள் முதலான கோயில் ஊழியர்களுக்கு எப்படி சம்பளம் கொடுப்பது? என்று பக்தர்களின் பெயரால் இந்து வெறியர்களும் மடாதிபதிகளின் அரசியல் எடுபிடிகளும் கூப்பாடு போடுகின்றனர். அர்ச்சனை செய்வதும், பூ கட்டுவதும் உற்பத்தி சார்ந்த தொழில் அல்ல; அர்ச்சகர்களும் ஓதுவார்களும் உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்களும் அல்ல.

கோயில்களும் மடங்களும் பக்தர்களின் காணிக்கையைக் கொண்டு ஆறுகால பூசையிலிருந்து அறுபது கால பூசை வரை நடத்திக் கொள்ளட்டும். அர்ச்சகர்களுக்கும் கோயில் ஊழியர்களுக்கும் ஆயிரக்கணக்கில் ஊதியம் கொடுக்கட்டும். பக்தர்களின் காணிக்கை பற்றாக்குறையாக இருந்தால் மடாதிபதிகளும் சங்கராச்சாரிகளும் சேற்றில் இறங்கி பாடுபட்டு, கோயிலுக்குச் சொத்து சேர்த்துக் கொடுக்கட்டும். நாம் தடுக்கப் போவதில்லை. அதேசமயம் விவசாயிகளின் பொதுச் சொத்தான கோயில் நிலங்களை அனுபவித்துக் கொண்டு ஒரு சிறு கும்பல் உல்லாச - வக்கிர வாழ்வு நடத்துவதை இனியும் சகித்துக் கொண்டிருப்பது எந்த வகையிலும் நியாயமில்லை.

தேவாலயங்கள், மசூதிகள், கோயில்கள் - மடங்களுக்குச் சொந்தமாக உள்ள இலடசக்கணக்கான ஏக்கர் நிலங்களை நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்து உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கும் புரட்சிகரமான தீர்வுக்குப் பதிலாக, நட்ட ஈடு கொடுத்து நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்கும் சமரசவாத, துரோகத்தனமான தீர்வையே போலி கம்யூனிஸ்டுகள் முன்வைக்கின்றனர். அதிலும், கோயில்கள் - மடங்களின் நிலத்தைக் குத்தகை விவசாயிகளுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்கிறார்களே தவிர, வக்ஃபு வாரியங்கள், தேவாலயங்களிடம் குவிந்துள்ள நிலங்களைப் பற்றி வாய் திறப்பதில்லை.

குத்தகை விவசாயிகள் கடனாளியாகித் தவிப்பதாக ஒருபுறம் கூறிக் கொண்டே, அவர்களிடம் தவணை முறையில் தொகையைப் பெற்றுக் கொண்டு கோயில் நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என்று போலி கம்யூனிஸ்டுகள் பிதற்றுகின்றனர். கடனாளியாகி சாகுபடி செய்ய வழியில்லாமல் தவிக்கும் குத்தகை விவசாயிகள், கோயில் நிலத்தை எப்படி பணம் கொடுத்து வாங்க முடியும் என்பது இப்போலிகளுக்கே வெளிச்சம்! குத்தகை விவசாயிகளின் பெயரால் ஆதிக்க சக்திகள் கோயில் நிலத்தை வாங்கிக் கொண்டு, காலங்காலமாக உழுது பயிரிட்டு வரும் குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து விரட்டியடிப்பதில்தான் இது போய் முடியும்.

தஞ்சை, நாகை மாவட்டங்களில் குத்தகை விவசாயிகளைப் பெருமளவு திரட்டி வைத்துள்ள போதிலும், கோயில் நிலங்களை உழுபவனுக்கே சொந்தமாக்கக் கோரும் நியாயமான போராட்டத்தை நடத்தக் கூட போலி கம்யூனிஸ்டுகள் வக்கற்று கிடக்கின்றனர். குத்தகை விவசாயிகளைத் தண்டித்து, நிலத்திலிருந்து வெளியேற்றும் கொடூரமான கருப்புச் சட்டத்தை எதிர்த்து கண்டன அறிக்கை வெளியிட்டதற்கு மேல், இப்புரட்டல்வாதிகள் வேறொன்றும் செய்யவில்லை. இனியும் இத்துரோகிகளை நம்பி குத்தகை விவசாயிகள் ஏமாற முடியாது. கோயில்கள் - மடங்களுக்குச் சொந்தமான இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்து உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கவும், குத்தகை விவசாயிகளிடம் எஞ்சியுள்ள அற்ப உடமைகளையும் பறிமுதல் செய்து நிலத்திலிருந்து வெளியேற்ற கொண்டு வரப்பட்டுள்ள கருப்புச் சட்டத்தை முறியடிக்கவும் விவசாயிகள் பெரும்படையாய்த் திரண்டெழ வேண்டும்.



**நாளை இவர்களின் எதிர்கால வாழ்வு என்னவாகும்? கோயில் நிலத்தில் குடும்பத்துடன் பாடுபடும் குத்தகை விவசாயி குடும்பம்.**

கோயில் நிலங்களைக் குத்தகைக்குச் சாகுபடி செய்வதாகப் பதிவு செய்து கொண்டு, நிலப்பிரபுக்களும் உள்ளூர் ஆதிக்க சக்திகளும் ஏழை விவசாயிகளிடம் உள் குத்தகைக்கு விட்டு ஆதாயமடைந்து வருகின்றனர். எனவே, கோயில் நிலங்களைக் குத்தகை விவசாயிகளுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று பொதுவாகக் கோருவதை விடுத்து, யார் உழுது பயிரிட்டுச் சாகுபடி செய்கிறார்களோ அத்தகைய விவசாயிகளிடமே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும். உழுது பயிரிட்டு வரும் உண்மையான குத்தகை விவசாயிகள் யார் என்று தீர்மானிக்கும் அதிகாரத்தை வருவாய்த் துறையிடமோ, அரசு அதிகாரிகளிடமோ ஒப்படைக்கக் கூடாது. அது இலஞ்ச ஊழலுக்கும் மோசடிக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளின் ஆதிக்கத்துக்குமே வழி வகுக்கும். எனவே, நிலப்பிரபுக்கள், உள்ளூர் அரசியல் - ஆதிக்க சக்திகளை முறியடித்து, கிராம மக்கள் கமிட்டியே யார் உண்மையான குத்தகை விவசாயி என்பதை முடிவு செய்து, கோயில் நிலங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். துரோக சங்கங்களைத் தூக்கியெறிந்து விட்டு, புரட்சிகர விவசாய சங்கங்களில் அணி திரள்வதே இதற்கான முதற்படியாகும்.

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவையும், அருகிலுள்ள இந்து சாம்ராஜ்யம் நேபாளத்தையும் சுற்றி வந்து ஆன்மீக வியாபாரம் செய்துவரும் காஞ்சி சங்கர மடம், உட்கார்ந்த இடத்திலேயே கோடிகோடியாய் துட்டு சம்பாதிக்கும் குறுக்கு வழியில் இறங்கியுள்ளது. ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி மகா வித்யாலயா அறக்கட்டளையைத் துவக்கி, அதன் சார்பில் ஏற்கனவே அறிவியல் - கலைக் கல்லூரிகளை நடத்தி வரும் காஞ்சி சங்கர மடம், தற்பொழுது காஞ்சிபுரத்தில் மருத்துவக் கல்லூரியினைத் தொடங்கத் தீவிரமாக முயன்று வருகிறது.

தமிழகத்தில் பொது மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க தனியாரை அனுமதிப்பதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றி வருவதாகக் கூறும் தமிழக அரசு, காஞ்சி சங்கர மடம் துவங்க எண்ணிய மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. இதை எதிர்த்து காஞ்சி சங்கர மடம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், ஆறு வாரத்திற்குள் ஆட்சேபனையில்லாச் சான்றிதழ் (No objection certificate) வழங்க வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றம் கடந்த மார்ச் மாதம் தீர்ப்பளித்தது.

தமிழக அரசு கூறிக் கொள்ளும் இக் கொள்கையும், சட்டத் திருத்தங்களும், தனியார் முதலாளிகள் தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குவதை முற்றிலுமாகத் தடுத்துவிடவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. கடந்த பத்து - பன்னிரெண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் ஐந்து பொது மருத்துவக் கல்லூரிகளையும், கிட்டதட்ட பத்து பல் மருத்துவக் கல்லூரிகளையும் தனியார் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின்பொழுது, அவரது பினாமியான சாராய உடையார், இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியினைத் தொடங்க அனுமதி கொடுத்தான். எம்.ஜி.ஆர். இறந்தபின் ஆட்சியைப் பிடித்த கருணாநிதி, இக்கல்லூரியை சாராய உடையாரிடமிருந்து பிடுங்கி அரசு வசம் எடுத்துக் கொண்டாலும், அதன்பின் வந்த ஜெயா, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை சாராய உடையாரிடமே தாரை வார்த்தார். மைய அரசோ, அக்கல்லூரிக்கு நிகர் நிலைப் பல்கலைக் கழகத் தகுதியினை வழங்கி, அக்கல்லூரியினை மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பினையே தட்டிப் பறித்துவிட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், கோவை பி.எஸ்.ஜி. தொழில் குடும்பமும், தங்களின் பணபலம் - அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி மருத்துவக் கல்லூரியினைத் தொடங்கியதை, தமிழக அரசின் கொள்கையும் தடுக்கவில்லை; தமிழக ஓட்டுக் கட்சிகளும் எதிர்க்கவில்லை.

1992-ஆம் ஆண்டில், தமிழகத்திலும், ஆந்திராவிலும் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தீவிரமாகப் போராடிய பொழுது, மைய அரசு, ''இந்தியாவில் மருத்துவக் கல்வி தொடங்குவதற்கான முன் அனுமதியை இனி மைய அரசுதான் வழங்கும்'' என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. இச்சட்டத் திருத்தமும் மாணவர்கள் கோரியபடி தனியார் முதலாளிகள் மருத்துவக் கல்லூரி தொடங்குவதைத் தடுக்கவில்லை; மாறாக, தனியார் முதலாளிகளுக்கு மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி தரும் உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறித்து, தன் கைக்கு மாற்றிக் கொண்டது மைய அரசு.

மைய அரசு கொண்டு வந்துள்ள சட்டத் திருத்தத்தின்படி, மாநில அரசுகள், தங்களது மாநிலத்தின் குறிப்பிட்ட வட்டாரத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குவது விரும்பத்தக்கதா, நடைமுறை சாத்தியம் தானா என்பது குறித்து மட்டுமே ஆட்சேபனையில்லாச் சான்றிதழ் வழங்கலாம். தங்கள் மாநிலத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தேவையில்லை எனக் கூறுவதற்கு மாநில அரசுகளுக்கு உரிமை கிடையாது; கிருபானந்தா வாரியார் அறக்கட்டளைக்கும் தமிழக அரசுக்கும் இடையே உச்சநீதி மன்றத்தில் நடந்த வழக்கில், கிருபானந்த வாரியார் அறக்கட்டளை, சேலத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு தமிழக அரசிடமிருந்து ஆட்சேபனையில்லாச் சான்றிதழ் வாங்கக் கூடத் தேவையில்லை என உச்சநீதி மன்றம் சலுகை காட்டியது.

★☆★

உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசு தொடுக்கவுள்ள மேல் முறையீட்டு வழக்கிலும் காஞ்சி மடத்திற்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைத்துவிட்டால், ஏற்கனவே தமிழக அரசிடம் விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கும் கல்வி வியாபாரிகள், 25 பொது மருத்துவக் கல்லூரிகளையும், 17 பல் மருத்துவக் கல்லூரிகளையும் அடுத்தடுத்துத் திறந்துவிட முழு மூச்சுடன் இறங்கி விடுவார்கள். மருத்துவக் கல்லூரி தொடங்கி திடீர்க் குபேரனாகிவிடக் காத்திருப்போர் வரிசையில் பங்காரு அடிகளாரும் உண்டு; எஸ்.ஏ. ராஜா என்ற கிரிமினலும் உண்டு.

### தனியார் மருத்துவக் கல்லூரிகள்:

# தாராளமயம் பரப்பி வரும் கொள்ளை நோய்

மருத்துவக் கல்வியை வியாபாரமாக்கும் இத்தீர்ப்பைக் கண்டித்தும், காஞ்சி சங்கர மடம் மருத்துவக் கல்லூரி தொடங்க முயலுவதை எதிர்த்தும் அரசு பொது மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். சென்னையில், தீர்ப்பைக் கண்டித்து ஆர்ப்பாட்ட பேரணியும், மருத்துவக் கல்வி வணிகமயமாக்கப்படுவதை எதிர்த்துக் கருத்தரங்கமொன்றையும் நடத்தினர்.

★☆★

இராஜீவ் காந்தி புதிய கல்வி கொள்கையைப் புகுத்தியவுடனேயே, தமிழகத்தில் பத்துக்கும் மேற்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க கல்வி வியாபாரிகள் முயன்றனர். இதை எதிர்த்து அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தீவிரமாகப் போராட்டங்களை நடத்தவே, தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கும், அக்கல்லூரிகளை மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொள்வதற்கும் தமிழக அரசின் அனுமதி பெற வேண்டும் என்று சட்டத் திருத்தங்களும் கொண்டு வரப்பட்டன.

அரசு மருத்துவமனைகளில் ஊசி போடுவதற்கே இலஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும் அநியாயத்தைக் காட்டியும், நோயாளியை அறுத்துப் போட்டு விட்டு, தைப்பதற்கு நூல் கிடையாது என்று மருத்துவர்கள் கையை விரிக்கும் அவலத்தைக் காட்டியும்தான், தனியார்கள் மருத்துவச் சேவை என்ற பெயரில் கொள்ளையடிப்பது நியாயப்படுத்தப்படுகிறது. தனியார் நடத்தும் 24 மணி நேர மருத்துவமனைகளில் நுழைவதற்கே அண்டா குண்டாவை அடகு வைக்க வேண்டியிருக்கும்பொழுது, கோடிக்கணக்கில் முதலீடு செய்து இக்கல்வி வியாபாரிகள் தொடங்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நுழைவது பற்றி ஏழைகள் எண்ணிக் கூடப் பார்க்க முடியாது.

இலட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து, தனியார் மருத்துவக் கல்லூரியில் படித்துவிட்டு வரும் பணக்கார வீட்டு பிள்ளை, அஞ்சுக்கும், பத்துக்கும் மருத்துவம் பார்க்க முன்வரப் போவதில்லை. படிப்பதற்கு போட்ட முதலை எடுக்க அமெரிக்கா போவோமா, இலண்டன் போவோமா, ஐந்து நட்சத்திர மருத்துவமனை கட்டுவோமா என நினைப்பானே



படிப்பகம்

www.padippakam.com

தவிர, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் போய் உட்கார்ந்து சேவை செய்வோம் என எண்ண மாட்டான். எனவே, தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெருகுவதால், தமிழக மக்களுக்கு தரமான இலவச மருத்துவ சேவை கிடைக்கும் என நம்புவதற்கே இடமே இல்லை.

ஆரம்பப் பள்ளிகளை நடத்துவதற்கே நிதியில்லை எனக் கையை விரிக்கும் தமிழக அரசு, மாவட்டந் தோறும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கப் போவதாக அறிவிக்கிறது. மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகளைத் திறந்துவிட்டால், தமிழக மக்களுக்குத் தரமான மருத்துவ சேவை கிடைத்து விடுமா? அரசு மருத்துவமனைகள் - ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யாமல், போதுமான மருந்துப் பொருட்களை வாங்கிக் கொடுக்காமல், அடிப்படை சுகாதார வசதிகளையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தாமல், நோய் நொடியற்ற சமூகத்தை உருவாக்கிவிட முடியாது.

ஆனால், தாராளமயம் என்ற பெயரில் அரசு மருத்துவமனைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படுகிறது; குடிநீர் வழங்குவது, குப்பை அள்ளுவது, கழிப்பிட வசதி போன்ற பொது சுகாதார சேவைகள் தனியார்மயமாக்கப் படுகின்றன. மக்களை வறுமைக்குள்ளும், சுகாதார கேட்டினுள்ளும் தள்ளும் அதே தாராளமயம்தான் மருத்துவக் கல்வியையும் வணிகமயமாக்கி வருகிறது.

★☆★

தாராளமயத்தை ஆதரித்துக் கொண்டே, மருத்துவக் கல்வி வியாபாரமாவதை எதிர்க்கும் மாணவர்களின் போராட்டத்தையும் ஆதரிப்பதாக ஓட்டுக் கட்சிகள் பசப்புவது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனமாகும்.

அரசியலையே வியாபாரமாக நடத்தி வரும் ஓட்டுக் கட்சித் தலைவர்கள், சட்டபூர்வமாகவே கோடிகோடியாய்க் கொள்ளையடிக்கும் வாய்ப்புள்ள கல்வி வியாபாரத்தையா விட்டு வைத்திருப்பார்கள்? வாழப்பாடி இராமமூர்த்தி, சோ. பாலகிருஷ்ணன், தம்பிதுரை, கே.வி. தங்கபாலு, ஜெகத்ரட்சகன், பொன்னுசாமி, ஜெயமோகன், தண்டாயுதபாணி, முனிரத்தினம் - இப்படி பல்வேறு ஓட்டுக் கட்சிகளைச் சேர்ந்த பல (முன்னாள்/இந்நாள்) தலைவர்களும் கல்வி வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கும் போது, எந்தவொரு ஓட்டுக் கட்சிக்கும் கல்வி வியாபாரமாவதைக் கண்டிக்கும் அருகதை இருக்கத்தான் முடியுமா?

த.மா.கா.வின் சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவர் சோ. பாலகிருஷ்ணன், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் போராட்டத்தை ஆதரிப்பதாக வாக்குறதி கொடுத்தார். மருத்துவக் கல்வி வியாபாரமாவதைக் கண்டித்து மாணவர்கள் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்ட த.மா.கா.வின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஞானசேகரனும், ராமனும் காஞ்சி சங்கர மடம் மருத்துவக் கல்லூரி தொடங்குவதை அனுமதிக்கக் கூடாது என முழக்கமிட்டனர்.

ஆனால், தமிழக சட்டமன்றக் கூட்டத்தில் த.மா.கா.வின் சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவர் சோ. பாலகிருஷ்ணன், "காஞ்சி சங்கர மடமும், பங்காரு அடிகளாரும் மருத்துவக் கல்லூரி தொடங்குவதை அனுமதிக்க வேண்டும்" எனப் பேசி, தான் யாருடைய விசுவாசி எனக் காட்டிக் கொண்டு விட்டார். இப்படி பச்சையாகவே மாணவர்களின் முதுகில் குத்தியதற்காக, சோ. பாலகிருஷ்ணனும், ராமனும், ஞானசேகரனும் வெட்கப்படப் போவதில்லை. மாற்றுக் கட்சிக்காரனும் கூட இப்புரட்டலை அம்பலப்படுத்தப் போவதில்லை. ஏனென்றால், இப்படி இரட்டை வேடம் போடுவது ஓட்டுக் கட்சிகளின் பொதுப் பண்பாடு.

மருத்துவக் கல்லூரிகளைத் திறக்க அனுமதிப்பது தொடர்பாக தமிழக அரசு இழந்துவிட்ட உரிமையை மீட்டெடுக்கும் வகையில், தமிழக சட்டசபை ஒரு சட்டத்தை உருவாக்கி, அதற்கு அரசுத் தலைவர் ஒப்புதல் பெற முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர். இது பற்றி வாயே திறக்காத தி.மு.க. அரசு, மாநில அரசுகளே பரிசுச் சீட்டு நடத்தும் உரிமையை திரும்பப் பெற, மைய அரசுடன் மோதப் போவதாக அறிக்கை விடுகிறது. தமிழன் குடியை தமிழன்தான் கெடுக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் இனப்பற்று போலும்! தி.மு.க.விற்கும் பா.ஜ.க.விற்கும் ஏற்பட்டுள்ள உறவு, வழக்கில் பாதியை வென்றுவிட்டோம் என்ற துணிச்சலை சங்கர மடத்திடம் ஏற்படுத்தவும் கூடும்.

★☆★

தனியார் முதலாளிகள் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதை எதிர்க்கும் மாணவர்கள், தனியார் முதலாளிகள் நடத்தும் ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளையும், மருத்துவர்களே நடத்தும் தனி மருத்துவமனைகளையும் எதிர்த்துப் போராடவும் முன்வர வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் தேவையற்ற மருந்துப் பொருட்களை இந்தியச் சந்தையில் கொட்டிக் குவிப்பதும்; காப்புரிமை சட்டத்தைத் திருத்தியதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் மருந்துப் பொருட்களின் விலையைத் தாறுமாறாக உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப் பட்டிருப்பதும் இதைத்தான் எடுத்துக் காட்டுகிறது: தாராளமயம் மருத்துவக் கல்வியை மட்டுமல்ல, மருத்துவத் துறையையே பணம் காய்க்கும் மரமாக எண்ணுகிறது.

இதே தாராளமயம்தான் பொதுத் துறையை இழுத்து மூடி, தொழிலாளர்களை வேலையை விட்டுத் துரத்துகிறது; மான்சான்டோ போன்ற பன்னாட்டு விதை நிறுவனங்களுக்கு நமது நாட்டு விவசாயிகளைக் கொத்தடிமைகளாக்கச் சதி வலை பின்னுகிறது.



மருத்துவக் கல்வி வியாபாரமாக்கப்படுவதை எதிர்த்து அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களும், பயிற்சி மருத்துவர்களும் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

தமிழக அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக மருத்துவக் கல்வியில் தனியார் நுழைவதை எதிர்த்துப் போராடி வந்தாலும், சில தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தடுத்து நிறுத்தியிருந்தாலும், இப் போராட்டத்தில் முழு வெற்றியடைய முடியவில்லை. இதன் காரணமே, அனைத்துத் துறைகளிலும் புகுத்தப்படும் தனியார்மயத்தை எதிர்த்து நடைபெற்று வரும் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்படாதது தான்.

எனவே, அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களும் / பயிற்சி மருத்துவர்களும் மருத்துவத் துறையையும், இந்திய நாட்டையும் சூறையாடி வரும் தாராளமயத்தை எதிர்த்துப் போராடவும் முன்வர வேண்டும். இதன் மூலம் மட்டுமே, போராட்டத்தில் இறுதி வெற்றியைச் சாதிக்க முடியும்!

• செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# உலகப் பொருளாதாரத்தின் உண்மை நிலை

மேற்கே மெக்சிகோ தொடங்கி, கிழக்கே இந்தோனேசியா வரை உலகின் பின்தங்கிய, ஏழை நாடுகள் அடுத்தடுத்து திவாலாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் உலகு தழுவிய கூட்டுப்பங்குத் தொழில் கழகங்கள் மூலதனத்தை ஒன்று குவிப்பதிலும் இலாபம் ஊதிப் பெருக்குவதிலும் நாலுகால் பாய்ச்சலில் வளர்கின்றன. தனிப்பட்ட நாடுகள், தேசங்களின் பொருளாதாரங்களை அப்படியே விழுங்கிக் கபளீகரம் செய்துவிடும் அளவுக்கு தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்கள் பூதாகரமாக வளர்ந்துவிட்டன.

இன்றைய உலகில் சுமார் 40,000 கூட்டுப்பங்கு தொழில் கழகங்கள் தேசிய எல்லைகளைக் கடந்து சுமார் 2,50,000 அந்நிய இணைப்பு நிறுவனங்களை வைத்து தொழில் - வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 90 சதவீதமானவை முன்னேறிய ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளைச் சேர்ந்தவை.

ஒவ்வொன்றும் பல நாட்டுப் பொருளாதாரத்தையும் விஞ்சும் அளவுக்குப் பெரிதானவை. 200 பூதாகரமான, உலகு தழுவிய கூட்டுப்பங்குத் தொழில் கழகங்கள் மட்டும் உலகப் பொருளாதாரச் செயல்பாடுகளில் மூன்றிலொரு பங்குக்கு மேல் கட்டுப்படுத்துகின்றன. 170 நாடுகளில் இயங்கும் "ஃபிலிப்மோரிஸ்" என்கிற தேசங்கடந்த தொழில் கழகம் நியூசிலாந்து நாட்டின் பொருளாதாரத்தை விடவும் பெரியதாக உள்ளது. 7,50,000 தொழிலாளர்களைக் கொண்ட அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஆண்டு வர்த்தகம் 12,000 கோடி டாலர். அதாவது சுமார் 50 இலட்சம் கோடி ரூபாய்.

பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட பின்தங்கிய நாடுகளில் ஒன்றான மெக்சிகோவின் மொத்த தேசிய உற்பத்திக்கு சமமான அளவில் இந்த ஜெனரல் மோட்டார்சும் "ஷெல்" எனும் எண்ணெய் நிறுவனமும் செய்யும் வர்த்தகம் உள்ளது. ஐ.பி.எம். என்ற அமெரிக்கக் கம்பூட்டர் இயந்திர நிறுவனம் மட்டும் 6900 கோடி டாலர் - அதாவது சுமார் 30 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு வர்த்தகம் புரிகிறது. இது இலத்தின் அமெரிக்கா, ஆஃபிரிக்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் மொத்த உற்பத்திப் பொருள் ஏற்றுமதியை விட அதிகமாகும். இரண்டரைக் கோடி மக்களைக் கொண்ட டான்சானிய நாட்டின் மொத்த ஆண்டு உற்பத்தி மதிப்பின் அளவுக்கு அமெரிக்காவின் கோகோ-கோலா அல்லது ஜப்பானின் டயோட்டா நிறுவனம் ஆண்டுக்கு இலாபமீட்டுகிறது.

இன்னும் இதுபோன்ற பல புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. இவை, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் உலகப் பொருளாதார நிறுவனங்கள் வாக்களித்ததற்கு மாறாக பின்தங்கிய மற்றும் ஏழை நாடுகளின் நல்வாழ்வு முன்னேற்றத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த உலகக் கிராமத்தை உருவாக்கிவிடவில்லை; மாறாக மூன்றிலொரு பங்கு கூட இல்லாத உலக மக்கள் வாழும் ஒரு சில நாடுகளின் நலன்களுக்காக, மூலதனம் - உற்பத்தி - வர்த்தக வலைபின்னலைத்தான் உலகு தழுவிய இந்தக் கூட்டுப்பங்கு தொழில் கழகங்கள் உருவாக்குகின்றன என்பதையே காட்டுகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கினால் பணக்கார நாடுகளின் அடிமட்டத்தில் உள்ள 20 சதவீத மக்களும், பின்தங்கிய - ஏழை நாடுகளின் அடிமட்டத்தில் உள்ள 80 சதவீத மக்களுமாக மொத்தம் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் ஒட்டச் சுரண்டப்பட்டு, பொருளாதார விளிம்புக்கு வெளியே தள்ளப்படுகின்றனர்.

தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்கள் உலகம் முழுவதும் பல பத்து இலட்சம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றன. ஒரு நொடிகூட வீணாகாதவாறு அத்தொழிலாளர்களின் ஒவ்வொரு அசைவும் திட்டமிடப்படுகிறது. பின்தங்கிய, ஏழை நாடுகளின் சந்தையை முழுக்கவும் ஆக்கிரமித்துக் கொண்டு, உள்ளூர் உற்பத்தியை முற்றாக - ஈவு இரக்கமின்றி ஒழித்துக் கட்டி, தெற்குலகை வெற்றி கொள்வதுதான் பன்னாட்டு ஏகபோகங்களின் திட்டம். சோசலிசம் அல்லது கம்யூனிச நோக்கங்களுக்காக மையப்படுத்தப்பட்ட, கட்டுப்பாடு மிக்க பொருளாதாரத் திட்டமிடுதல் தோற்றுப் போய்விட்டதாக சாடும் அவர்கள்தான் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிவதற்காக மிகவும் கறாரான - நுட்பமான முறையில் திட்டமிடுகின்றனர்.

கம்யூனிச சித்தாந்தந்துக்கு எதிராக உலகம் முழுவதும் பரப்பப்படும் அவதூறு அலை, உண்மையில் ஏகாதிபத்திய உலகக் கூட்டுப்பங்குத் தொழில் கழகங்களை வலிமைப்படுத்துவதற்குத்தான் என்பது இப்போது அப்பட்டமாகிவிட்டது. தாராளமயமாக்கலும் தனியார்மயமாக்கலும் உண்மையில் பொருளாதார - சந்தை சுதந்திரத்தையோ, கூட்டுப்பங்கு ஜனநாயகத்தையோ கொண்டு வந்துவிடவில்லை. மாறாக, உலக மக்கள் அனைவரின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்வில் தலையிட்டு தேசங்கடந்த, பன்னாட்டு தொழில் கழகங்களின் ஏகபோக - பாசிச சர்வாதிகாரத்தையே நிறுவியிருக்கிறது என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.



புதிய பொருளாதாரக் கொள்கையும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும் வாக்களித்தபடி மக்களின் நலன்கள் - தேவைகளை நிறைவு செய்வதற்காகவோ, வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காகவோ கூட்டுப்பங்குத் தொழிற்கழகங்கள் திட்டமிடுவதில்லை. உலகின் தொலை தூரத்திலுள்ள -



படிப்பகம்

மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவித் தனது கொள்ளையைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்வதும் பல கோடி மக்களின் வாழ்வைச் சூறையாடி பட்டினிச் சாவில் வீழ்த்துவதும்தான் அவற்றின் நோக்கம். முதலாளித்துவ ஏகாதிபத்தியம் அதன் உச்சகட்ட வளர்ச்சியில் உலகு தழுவிய படுகொலைகள் புரியும் நாசகார சக்தியெனக் காட்டிவிட்டது. அமெரிக்காவில் புதிய தொழில் நுட்பங்களும், புதிய பாணி உழைப்புப் பிரிவினையும் தனியார்துறையில் பணிபுரியும் ஒன்பது கோடிப்பேரில் இரண்டரைக் கோடிப் பேரை வெளியே வீசியெறிந்து விட்டது. ஐரோப்பாவில் 17 தொழிற்துறைகளில் மேற்கொள்ளப்படும் மறுகூட்டமைப்பு 12.5 சதவீதமான உழைப்பாளர்களை வேலை இழக்கச் செய்துவிட்டது. இரண்டாம் உலகப் போருக்கு வழி வகுத்த 1929-1932 பொருளாதார நெருக்கடியோடு ஒப்பிடும் அளவுக்கு 3.6 கோடி பேர் மேற்கு உலகில் வேலையற்றவர்களாக உள்ளனர்.

சுருக்கமாகச் சொன்னால், பின்தங்கிய, ஏழை நாடுகளின் கோடானு கோடி மக்களை பட்டினி, அதீத சுரண்டல் மற்றும் உடல் ரீதியான அழிவை நோக்கித் தள்ளும், ஊமைக் காயங்களை ஏற்படுத்தும் அழிவுச் சக்திகளாக சர்வதேசக் கூட்டுப் பங்குத் தொழிற்கழகங்கள் வளர்ந்துவிட்டன. இங்கே தனியே தொகுத்தளிக்கப்பட்டுள்ள பெட்டிச் செய்தியானது, சர்வதேசக் கூட்டுப்பங்குத் தொழிற் கழகங்களின் விரிவாக்கத்தால் பயனடைந்தோருக்கும், ஒதுக்கித் தள்ளப்பட்டோருக்கும் இடையிலான இடைவெளி அகலமாகி வருவதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. • முத்து

## உலகைக் கலக்கும் உண்மைகள்

* இப்போது உலகிலுள்ள 100 பெரிய பொருளாதாரங்களில் 51 சர்வதேச கூட்டுப்பங்குத் தொழிற் கழகங்களினுடையவை; 49 மட்டுமே வெவ்வேறு நாடுகளினுடைய, பொருளாதாரங்கள். இந்த நூறில் பன்னிரெண்டாவது இடத்திலுள்ள வால் - மார்ட் என்ற தொழிற் கழகத்தின் பொருளாதார பலம் இசுரேல், போலந்து, கிரீசு உட்பட உலகின் 161 நாடுகளின் பொருளாதாரத்தை விடப் பெரியது. உலக மக்கட் தொகையில் நான்காவதாக உள்ள இந்தோனேசியப் பொருளாதாரத்தை விட ஜப்பானின் மிட்சுபிசி பெரியது. டென்மார்க்கைவிட ஜெனரல் மோட்டார்சும், தென் ஆப்பிரிக்காவை விட ஃபோர்டும், நார்வேயை விட டயோட்டாவும் பெரியவை.

* உலகின் முதல் 200 மேல்நிலை கூட்டுப்பங்குத் தொழிற் கழகங்களின் மொத்த வர்த்தகம், உலகப் பொருளாதார நடவடிக்கைகளில் கால் பங்குக்கு மேல் மிக அதிகமாகும். 1982-இல் உலகின் மொத்த உற்பத்தி மதிப்பில் 24.2 சதவீத அளவுக்கு வர்த்தகம் புரிந்த இந்த தொழிற் கழகங்கள் இப்போது 28.3 சதவீத அளவுக்கு உயர்ந்து விட்டன.

* உலகின் முதல் 200 மேல்நிலை சர்வதேசக் கூட்டுப்பங்குத் தொழில் கழகங்களின் மொத்தக் கூட்டு வர்த்தகம், உலகின் மிகப் பெரிய ஒன்பது நாடுகளைக் கழித்து அனைத்து நாடுகளின் பொருளாதாரக் கூட்டு மதிப்பைவிட அதிகமாகிவிட்டது. அதாவது 182 நாடுகளின் மொத்தக் கூட்டுப் பொருளாதாரத்தை இந்த 200 தொழிற் கழகங்களின் வர்த்தகம் விஞ்சிவிட்டது. 182 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திகளின் கூட்டுத் தொகை 6,90,000 கோடி டாலர்கள்தான். ஆனால் உலகின் 200 மேல்நிலைத் தொழிற் கழகங்களின் வர்த்தகமோ 7,10,000 கோடி டாலர்களாக உள்ளது.

* மனித சமுதாயத்தில் மிகவும் ஏழைகளான ஐந்துக்கு நான்கு பகுதி மக்கள் எந்த அளவு பொருளாதார பலம் பெற்றிருக்கிறார்களோ அதைவிட இரண்டு பங்கு இந்த 200 மேல்நிலைத் தொழிற் கழகங்கள் பெற்றுள்ளன. செல்வமும் வருவாயும் அதீத அளவு பணக்காரர்களிடம் குவிந்துள்ளது. அதாவது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதம் ஐந்தில் ஒரு பங்கினரான பணக்காரர்களிடம் குவிந்துள்ளது. 15 சதவீதமே ஐந்தில் நான்கு பங்கினரான ஏழைகளிடம் எஞ்சியிருக்கிறது.

* உலகின் 200 மேல்நிலை தொழிற் கழகங்கள்தான் சமீப ஆண்டுகளில் வேலை வாய்ப்புகளை அழிப்பவர்களாக உள்ளனர். இத்தொழிற் கழகங்கள் உலகம் முழுவதும் 1.88 கோடிப் பேருக்கு வேலையளித்திருக்கின்றன. ஆனால் இது உலக உழைப்புச் சக்திகளில் 0.33 சதவீதம்தான். இந்தத் தொழிற் கழகங்கள் உலகப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அளவோடு ஒப்பிடும் போது இவை அளித்திருக்கும் வேலை வாய்ப்பு மிகமிகச் சொற்பமே.

* 200 மேல்நிலை கூட்டுப்பங்கு தொழிற் கழங்களின் வரிசையில் அமெரிக்காவின் தொழிற் கழகங்களை ஜப்பானினுடையவை விஞ்சிவிட்டன. 10 மேல்நிலை தொழிற் கழகங்களில் 6 ஜப்பானுடையவை; 3 மட்டுமே அமெரிக்காவினுடையவை. 200 மேல்நிலைத் தொழிற் கழகங்களில் 186 மேலை நாடுகளைத் தலைமையகங்களாகக் கொண்டவை. அவற்றின் மொத்த வர்த்தகத்தில் 39 சதவீதத்தை ஜப்பானின் 58 கழகங்களும், 28 சதவீதத்தை அமெரிக்காவின் 59 கழகங்களும் பெற்றுள்ளன.

* இந்த 200 மேல்நிலைத் தொழிற் கழகங்களின் வர்த்தகத்தில் பாதிக்கு மேலானது. ஐந்தே துறைகளில் உள்ளது. அவை வியாபாரம், மோட்டார் வாகனம், வங்கிகள், விநியோகம் மற்றும் மின்னணுத்துறை. இந்தத் துறைகளில் எல்லாம் ஐந்தே மேல்நிலை தொழிற் கழகங்கள் ஏகபோகம் வகிக்குமளவு மூலதனம் குவிந்துள்ளது.

* வெவ்வேறு நாடுகளில் உள்ள ஒரே தொழிற் கழகம், தனக்குள்ளேயே வியாபாரம் செய்து கொள்வது சுதந்திர வர்த்தகத்தைக் குறிக்க முடியாது. ஆனால் அப்படித்தான் நடக்கிறது. மூன்றில் ஒரு பங்கு வர்த்தகம் அந்தந்தத் தொழிற் கழகங்களின் கிளைகளுக்கிடையேதான் நடக்கிறது. சான்றாக, ஜப்பானின் ஏற்றுமதியில் ஐந்தில் இரண்டு பங்கு அதன் தொழிற் கழகங்களுக்கிடையே நடக்கிறது.

* ஐ.எம்.எஃப்., உலகவங்கி, உலக வர்த்தக நிறுவனம் (WTO) போன்ற மேல்நிலை வல்லரசுகளின் உலகப் பொருளாதார அமைப்புகளை மட்டுமல்ல, உலகின் பல அரசு அமைப்புகளையும் ஐக்கிய நாடுகள் சபையையும்கூட கட்டப்படுத்தும் அளவுக்கு உலகக் கூட்டுப்பங்கு தொழிற் கழகங்கள் வளர்ந்துவிட்டன. அந்நிய முதலீடுகளால் ஏழைநாடுகளில் ஏற்படும் சமூக - பொருளாதார - சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கண்காணிக்கும் ஐ.நா. சபையின் "யு.என்.சி.டி.சி." என்ற மையத்தை அவை முடக்கிவைத்துவிட்டன. அனைத்துலக நீடித்த வளர்ச்சி வாய்ப்பு என்ற ஐ.நா.வின் திட்டத் (GSDF)துக்குள் புகுந்து செயல்படுகின்றன. உலகம் முழுவதும் மனித உரிமை மீறல், ஊதிய மறுப்பு, சுற்றுச் சூழல் கேடு ஆகியவற்றுக்குக் காரணமான "ரியோ-டின்டோ", "ஏசியா பிரவுன் போவரி", "டோவ் கெமிக்கல்ஸ்", "ஸ்டேட் ஆயில்" போன்றவை ஐ.நா.வின் உதவித் திட்டங்களுக்குப் புரவலராக மாறி, "சேவை" செய்யக் கிளம்பிவிட்டன.

* 200 மேல்நிலை தொழிற் கழகங்கள் ஒரு உலகக் கிராமம் என்கிற முறையில் நாடுகளை நெருக்கமாக்கிவிடவில்லை. இன ஒதுக்குதல்களைப் போல, பொருளாதார ரீதியில் நாடுகள், தேசங்களை விலக்கி வைப்பதையே செய்கின்றன. சான்றாக, 8 மேல்நிலை தொலைத் தொடர்பு நிறுவனங்கள் உலகளவு விரிவடைந்து கொண்டே போகும்போது, பத்தில் ஒரு பங்கு மக்கள் ஒரு தொலைபேசி இணைப்பு வசதிகூடப் பெற்றிருக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# இராஜீவ் கொலை வழக்கில் உச்சநீதி மன்றத் தீர்ப்பு: தகர்ந்த "தடா"!

இராஜீவ் கொலைக்காக நிரபராதிகளான தமிழர்கள் பலரையும் பழிக்குப் பழிவாங்கும் பாசிச வெறிக்கு ஓரளவு பின்னடைவைத் தரும் வகையில் உச்சநீதி மன்றத் தீர்ப்பு சமீபத்தில் வந்திருக்கிறது.

சென்னை - பூவிருந்தவல்லி "தடா" - சிறப்பு நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்ட 26 பேர்களில் 19 பேர் "விடுவிக்கப்பட்டுள்ளனர்." 4 பேருக்கு மரண தண்டனையும், 3 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. உண்மையில் சொல்லப் போனால், "தடா" - சிறப்பு நீதிமன்றம், சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழு உட்பட அரசு அமைப்புக்கும், அதன் பின்நிற்கும் இராஜீவ் விசுவாச பாசிச வெறியர்களுக்கும் சட்ட ரீதியில் பெருந் தோல்வியாகவே உச்சநீதி மன்றத் தீர்ப்பு அமைந்துள்ளது. அதேசமயம் நாட்டின் உச்சநீதி மன்றம் கூட அரசியல் உருட்டல் மிரட்டலுக்கு அப்பாற்பட்ட - அஞ்சாத அமைப்பு அல்ல என்பதை சுயமுரண்பாடான தீர்ப்பின் சில அம்சங்கள் காட்டுகின்றன.

இந்தத் தீர்ப்பின் மிக முக்கிய உறுப்பு என்னவென்றால், குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேரும் "தடா" சட்டத்தின் கீழ்வரும் எவ்விதக் குற்றமும் புரியவில்லை என்று வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகளும் ஒருமனதாகக் கூறி, அதிலிருந்து அனைவரையும் விடுவித்துள்ளனர்.

இராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் நடந்த பிறகுதான் தமிழ்நாட்டில் "தடா" சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, அதற்காகவே அமுலுக்கு வந்தது. அந்த வழக்கு விசாரணை முடிவதற்கு முன்பாகவே அச்சட்டம் காலாவதியாகியும் போய்விட்டது. இருந்தபோதும், இராஜீவ் கொலையை விசாரிக்க அமைக்கப்பட்ட சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவும் பாசிச ஜெயா தலைமையிலான தமிழகப் போலீசும் "தடா" சட்டத்தின் அடிப்படையிலேயே "குற்றவாளி"களைத் தேடும் வேட்டையையும் பிடிபட்டவர்களை விசாரித்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்வதையும், குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் மேற்கொண்டன. சென்னை - பூவிருந்தவல்லி "தடா" சிறப்பு நீதிமன்றமும் அதை ஏற்று, தடா சட்டத்தின் படிதான் 26 பேருக்கும் தண்டனை விதித்தது.

இதுதவிர வழமையான இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் கொலை மற்றும் சதிக் குற்றங்களுக்காக ஏழு பேருக்கு "தடா" நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. மீதி 19 பேருக்கு அந்நியர் சட்டமீறல், கடவுச் சீட்டுக் குற்றம், வெடிமருந்துச் சட்டம், கொலைத் தடயங்களை அழித்தல், கொலைக் குற்றவாளிக்கு புகலிடம் கொடுத்தல் போன்றவற்றிற்கு 2 அல்லது 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது.

இராஜீவ் கொலை வழக்குக்கு தடா சட்டம் அடியோடு பொருந்தாது; பயங்கரவாதக் குற்றம் எதுவும் நடக்கவில்லை என்று முடிவு செய்த உச்சநீதி மன்றம், அதன்கீழ் வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புகள் அனைத்தையும் இரத்து செய்துவிட்டது. தடா அல்லாத சட்டப் பிரிவுகளின் கீழ் "தடா" சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனைகளை மட்டுமே உச்சநீதி மன்றம் உறுதி செய்துள்ளது. அதிலும் நான்கு பேரின் மரண தண்டனையை உறுதி செய்து, மூன்று பேரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்திருக்கிறது.

"தடா" அல்லாத சட்டப் பிரிவுகளின் கீழ் உச்சநீதி மன்றம் உறுதி செய்த தீர்ப்புகளுக்குக் கூட "தடா" சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலங்களை செல்லுபடியாகும் என்கிற சுயமுரண்பாடு அடிப்படையில்தான் செய்திருக்கிறது. அதாவது, இந்தியத் தண்டனைச் சட்டப்படியும், சாட்சிய முறைமைச் சட்டப்படியும், குற்றஞ்சாட்டப்பட்டவர் போலீசு அதிகாரிகளுக்கு முன்பு அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தின் முன்பு ஆதாரமாகாது; செல்லுபடியாகாது. குற்றவியல் அதிகாரிகள் (நீதிபதிகள்) முன்பு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டுமே ஆதாரமாகும்; செல்லுபடியாகும். ஏனென்றால், போலீசாரின் காவலில் கைதிகளாக இருக்கும் போது போலீசார்வாங்கும் ஒப்புதல் வாக்குமூலம் சித்திரவதை உட்பட முறைகேடான வழிகளில் பெற்றதாக இருக்கும். நீதபதிகள் முன்பு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் நிர்பந்தங்களின்றி உண்மையானதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆனால், "தடா" சட்டத்தின் கீழ், "எஸ்.பி." தகுதி உடைய போலீசு அதிகாரி முன்பு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்ற ஆதாரமாக, சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும். வாக்குமூலம் தந்தவருக்கு எதிராகவே அந்தச் சாட்சியத்தைப் பயன்படுத்த முடியும். எண்ணிப் பாருங்கள், போலீசு அதிகாரிகள், அதுவும் "தடா" வழக்கு விசாரணை அதிகாரிகள் எப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டு ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறுவார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அதுவும் இராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில், பாசிச ஜெயாவின் கீழ் அரசு பயங்கரவாதம் கோலோச்சிய நாட்களில் பெறப்பட்ட வாக்குமூலங்கள் நிர்பந்தங்கள், உருட்டல் மிரட்டல்கள், சித்திரவதைகள் இல்லாமல், "தடா" கைதிகள் தாமே முன்வந்து சுதந்திரமாக அளித்தவை என்று நம்ப இடமுண்டா?

போர்க் குற்றவாளி ராஜீவ் காந்திக்கு விடுதலைப் புலிகள் அளித்த தண்டனை.



இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட எவரும் தடா சட்டத்தின் கீழ்வரும் எந்த குற்றமும் செய்யவில்லை; இந்த வழக்கே "தடா" சட்டத்துக்குப் பொருந்தாது என்கிறபோது, "தடா" சட்ட முறைகளைப் பயன்படுத்திப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை ஆதாரமாகக் கொள்ள முடியுமா? அவை செல்லுமா? இவற்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, இந்த சுயமுரண்பாடு அடிப்படையில்தான் நால்வருக்கு மரண தண்டனை, மூவருக்கு ஆயுள் தண்டனை என்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறது. இந்த ஒப்புதல் வாக்குமூலங்களை விட்டால் அவர்களைத் தண்டிப்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்கிற நிலையில் சுயமுரண்பாட்டைக் கொண்டு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, "தடா" சட்டத்தை சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு, தமிழக போலீசு, "தடா" நீதிபதி ஆகியோர் எப்படி சட்டத்துக்குப் புறம்பாக, தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உச்சநீதி



படிப்பகம்

www.padippakam.com

மன்றத் தீர்ப்பு அமைந்துள்ளது. 1. சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்தை நிரந்தர பயங்கர பீதியூட்டிப் பணிய வைப்பது; 2. மக்களைப் பயங்கர பீதியில் மூழ்கடிப்பது; 3. பல்வேறு பிரிவு மக்களிடையே பிளவை விதைத்து ஒருமைப்பாட்டைக் குலைப்பது ஆகிய மூன்று நோக்கங்களையும் கொண்டிருப்பதுதான் "பயங்கரவாதம்" ஆகும். இதைத் தடுப்பதற்காகப் போடப்பட்டதுதான் "தடா" சட்டம் என்கிற விளக்கத்தை உச்சநீதி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஏற்கனவே நடந்த "தடா" வழக்குகளிலும் இந்த அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் மேற்கண்ட மூன்று பயங்கரவாத நோக்கங்களைக் கொண்டிருந்தது என்பதற்கான ஆதாரம் கிடையாது என்று உச்சநீதி மன்றம் கருதுகிறது. கொலை போன்றதொரு பயங்கரச் செயலால் பாதிக்கப்படுவர்களும், அவர்களைச் சுற்றியிருப்பவர்களும் பயங்கர பீதி அடைவது, ஒட்டுமொத்த மக்களிடையே பயங்கர பீதியூட்டுவதாகாது; சட்டம் ஒழுங்கையோ பொது அமைதியையோ பாதிப்பது பயங்கரவாதமாகிவிடாது. ஒரு தனிநபர், ஒரு குழுவுக்கு மேலே ஒட்டுமொத்த சமுதாயத்துக்கே மனோவியல் ரீதியில் பயபீதியூட்டுவதுதான் பயங்கரவாதம் என்கிற விளக்கங்களோடு உச்ச நீதி மன்றம் உடன்பாடு கொண்டுள்ளது.

பயங்கரவாதம் பற்றிய மேற்கண்ட பார்வையின்படியே பார்த்தால்கூட நாம் ஏற்கனவே எழுதியபடி, "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிக்கப்பட வேண்டியவர்கள், இராஜீவ் கொலையைச் சாக்கு வைத்து தமிழ்ச் சமுதாயத்தின் மீது பயங்கர பயபீதியூட்டி உருட்டி மிரட்டி பணிய வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், இராஜீவ் - ஜெயாவுக்கு விசுவாசம் காட்டிச் செயல்பட்ட அரசியல் - அதிகாரிகள் கும்பல்தான்!

இராஜீவ் கொலை வழக்கில் உச்சநீதி மன்றத்தால் தண்டனை உறுதி செய்யப்பட்டவர்கள் முழு அமர்வு நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்திருக்கிறார்கள். சட்ட சாட்சியங்களின்படி மட்டுமல்ல, அரசியல் காரணங்களுக்காக நடந்த கொலை என்பதைக் கவனத்தில் கொண்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அப்போது கூட நிரபராதிகளுக்கு இராஜீவ் - ஜெயா விசுவாச அரசியல் - அதிகாரிகள் கும்பல் ஏற்படுத்தியுள்ள காயம் - பாதிப்புகளுக்கு என்ன தீர்வு? "தடா" சட்டம் பொருந்தாத வழக்கில் இவ்வளவு காலம் தண்டனை அனுபவித்திருக்கிறார்கள்; மரண தண்டனை என்கிற மன உளைச்சலில் தள்ளப்பட்டிருந்தனர். இதற்காக அரசுத் தரப்பு குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை? நிரபராதிகளுக்கு என்ன நிவாரணம்? சட்டப்படி எதுவும் கிடையாது! இதுதான் இந்த நாட்டின் சட்டம்!

**• மாணிக்கவாசகம்**




• அட்டைப்படம் மிகவும் அருமையான பேசும் படமாக போலி கம்யூனிஸ்டுகளைத் தோலுரித்துக் காட்டுகிறது. இதழ் விற்பனையின்போது, ஒரு 'மார்க்சிஸ்டு' கட்சிக்காரர் "உங்களுடன் எதிர்வாதம் செய்து சண்டை போட முடியாதவாறு அட்டையில் எங்களைப் பற்றி கேலிச் சித்திரம் போட்டுள்ளீர்களே!" என்று ஆதங்கப்பட்டார். வேறொரு இடத்தில் 'மார்க்சிஸ்ட்' கட்சி ஆதரவாளர் ஒருவர், தமது கட்சியின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தியதை மகிழ்ச்சியுடன் வரவேற்று எமக்கு தேநீர் வாங்கிக் கொடுத்தார். மற்றொரு இடத்தில், "இந்த அட்டைப்பட கேலிச் சித்திரத்தை எமது தோழர்கள் பார்த்தால் உங்களை அடித்து விரட்டிவிடுவார்கள்" என்று எம்மிடம் ஒரு 'மார்க்சிஸ்டு' ஆதரவாளர் சவால் விட்டார். அவர் குறிப்பிட்ட 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் நிறைந்துள்ள இடத்திலேயே நாங்கள் புதிய ஜனநாயகம் இதழை விற்பனை செய்தோம். எல்லோரும் பத்திரிகைய வாங்கினார்களே தவிர, யாரும் எதிர்க்கவில்லை. சவால் விட்ட அந்த நபர், "நான் விளையாட்டாகப் பேசியதை நீங்கள் சீரியசாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" என்று மழுப்பிவிட்டுச் சென்றார்.

ஈக்வடார் பற்றிய கட்டுரை தாராளமயம் - தனியார் மயத்தால் ஏற்படும் பேரழிவுகளையும் புரட்சி ஒன்றே தீர்வு என்பதையும் விளக்குவதாக சிறப்பாக அமைந்துள்ளது. இதுபோன்ற கட்டுரைகள் தொடர்ந்து வெளிவர வேண்டும். நமது இதழில் கேள்வி-பதில் பகுதி தொடர்ந்து இடம் பெற வேண்டும்.

**வாசகர் வட்டம்,**
**சென்னை.**

• யுகோஸ்லாவியா - நேட்டோ போர் பற்றிய கட்டுரையில் வரலாற்றையும் தற்போதைய நிகழ்வையும் விவரித்து வரும் போதே, இடையிடையே ஒரு சில ஒப்பந்தங்கள், திட்டங்கள், உருவாக்கங்கள் என்று அவற்றிற்குரிய பெயர்களை மட்டுமே குறிக்கப்பட்டிருந்ததே தவிர, அது குறித்த விளக்கமில்லை. காஷ்மீர் பற்றிய கட்டுரையில் ஓவன் டிக்சனின் திட்டத்தையும் விளக்கத்தையும் எழுதியிருந்தீர்கள். இதுவே சரியான வழிமுறை. இதை விடுத்து வெறுமனே பெயர்களை மட்டும் தொட்டுச் செல்வதென்பது குழப்பத்தையே ஏற்படுத்துகிறது. ஆகவே, இனி மேலாவது சரியான முறையைக் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சில வாசகர்கள் இதழைப் பற்றி துதிப்பாடல்களாக எழுதினாலும் எங்களைப் போன்ற வாசகர்களுக்கு பல கருத்துக்கள் அதன் மூலம் தெரிய வாய்ப்புள்ளது. எனவே வாசகர் கடிதங்களை வெளியிடுவது பற்றி பரிசீலிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**அ. அப்துல் ரஹ்மான்,**
**கூத்தா நல்லூர்.**

• தற்செயலாக புதிய ஜனநாயகம் படித்தேன். சாதி வெறியர்கள் புதிய வடிவங்களில் தீண்டாமையைத் திணித்து வருவதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். தீண்டாமைக் கொடுமையை அனுபவரீதியாக உணர்ந்துள்ள கூலித் தொழிலாளியான எனக்கு தொடர்ந்து இதழ் கிடைக்க உதவுங்கள்.

**எம். அந்தோணிசாமி,**
**சேசுராஜபுரம்.**

• நான் பெருந்துறை பேருந்து நிலையத்தில் ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். சமீபத்தில் நான் ஈரோடு சென்றபோது, ஒரு கடையில் தங்களின் இதழான "புதிய ஜனநாயகம்" வாங்கிப் படித்தேன். மிகவும் பயனுள்ள பல நல்ல கருத்துக்களுடன், உலக செய்திகளுடன், இன்றைய அரசியல்வாதிகளின் உண்மைச் சொரூபத்தையும் தோலுரித்துக் காட்டியிருந்தீர்கள். மிகவும் பயனுள்ள ஒரு இதழை வாங்கிப் படித்த முழுத் திருப்தி அடைந்தேன். அது முதல் ஒவ்வொரு முறையும் நான் இந்த இதழுக்காக ஈரோடு சென்று வாங்கிப் படித்து வருகிறேன்.

**முகமது இதாயத்துல்லா,**
**பெருந்துறை.**

• போலி ஜனநாயகத்தை எதிர்த்துப் போராடும், போலி அரசியல்வாதிகளை, போலி கம்யூனிஸ்டுகளைத் திரைகிழிக்கும், சாதி வெறியர்களின் சதியை அம்பலப்படுத்தும் ஒரே பத்திரிகை "புதிய ஜனநாயகம்"தான். புதிய ஜனநாயக இலட்சியங்களுக்காகப் பாடுபட விழைகிறேன்.

**மா. ஆனந்தன்,**
**முண்டியம்பாக்கம்.**

• விளம்பரங்களும் கவர்ச்சிப் படங்களும் நிரம்பிய பத்திரிகை உலகில், நல்ல ஏற்றமிகு பத்திரிகையாக நல்ல சமுதாயக் கருத்துக்களைத் தாங்கி வருகின்ற இதழாக புதிய ஜனநாயகம் வெளிவருவதை மனதாரப் பாராட்டுகிறேன். எமது பகுதியில் "புதிய ஜனநாயகம்" கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

**ஆர். இருதயசாமி,**
**கல்லக்குடி**



படிப்பகம்

www.padippakam.com



## கலசம் தூக்கிச் சாமியாடும் போலி கம்யூனிஸ்டுகள்

கேரளாவிலுள்ள இந்து வழிபாட்டுத் தலங்களில் இந்து மதவெறியர்களின் ஊடுருவலையும் ஆதிக்கத்தையும் தகர்ப்பது என்ற பெயரில் கோயில் திருவிழாக்குழு, நிர்வாகக் குழு, ஆலோசனைக் குழுக்களில் பங்கேற்கக் கிளம்பிய போலி கம்யூனிஸ்டுகள், இப்போது பக்தியில் மூழ்கி கலசம் தூக்கி ஆடக் கிளம்பிவிட்டனர். கண்ணனூர் மாவட்டத்தில் 60% கோயில்கள், வழிபாட்டுத் தலங்களை 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். காசர்கோடு மாவட்டத்தில் பெரும்பாலான கோயில்களில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆதிக்கம் செலுத்துகிறது. இருப்பினும் புத்திகா, கையூர், மடிக்கை பகுதிகளில் 'மார்க்சிஸ்டுகள்' ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

கண்ணனூர் மாவட்டத்தில் காவூ எனப்படும் சிறிய கோயில்களின் ஆண்டு திருவிழாக்களில், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பும், ஆர்.எஸ்.எஸ். கும்பலும் போட்டி போட்டுக் கொண்டு, மேளதாளத்துடன் கலசம் தூக்கி ஆடிக் கொண்டு ஊர்வலம் செல்வது இப்போது வாடிக்கையாகிவிட்டது. 'மார்க்சிஸ்ட்' கட்சியினரின் கலசங்களில் சிவப்புத் துணி அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்து வெறியர்களின் கலசங்கள் காவித் துணியால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆண்டு தோறும் இத்தகைய திருவிழா ஊர்வலம் - சாமியாட்டங்களின் போது, இருதரப்பும் மோதிக் கொள்வதும் அடிதடி - வெட்டு குத்து நடப்பதும் வாடிக்கையாகிவிட்டது. ஆலப்புழா சிறீகிருஷ்ணன் கோயிலில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்பதையொட்டி இந்து வெறியர்களும் போலி கம்யூனிஸ்டுகளும் மோதிக் கொண்டதில், கடந்த ஏப்ரல் 17-ம் தேதியன்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பைச் சேர்ந்த ஒருவர், கோயில் வளாகத்திலேயே வெட்டிக் கொல்லப்பட்டார். அந்த அளவுக்கு கோயில் நிர்வாக, திருவிழாக் குழுக்களைக் கைப்பற்றுவதில் இரு தரப்புக்குமிடையே வன்முறை வெறியாட்டங்கள் தொடருகின்றன.

கம்யூனிஸ்டுகள் கடவுள் - மதம் பற்றிய மூடநம்பிக்கைகளுக்கு எதிராக நாத்திகப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது மார்க்சிய அரிச்சுவடி. ஆனால் போலி கம்யூனிஸ்டுகளோ, மதவெறி சக்திகளை முறியடிக்க, கோயில் கமிட்டிகளில் பங்கேற்பது அவசியம் என்று கட்சி அணிகளுக்கு சுற்றறிக்கையே அனுப்பி வழிகாட்டுகின்றனர். ''இந்துத்துவ சக்திகள் கோயில் கமிட்டிகளை உந்து பலகையாகக் கொண்டு காலூன்றி வருவதால், அதனை முறியடிக்க நமது அணிகளும் கோயில் கமிட்டிகளில் பங்கேற்க வேண்டும். பக்தர்களை மதச்சார்பற்ற பாதையில் இழுத்து வரவும், இந்து வெறியர்களின் சதிகளை முறியடிக்கவும் இது அவசியம்; கட்சி ஆதரவாளர்கள் கோயில் கமிட்டிகளில் பங்கேற்கலாம்; ஆனால் கட்சி உறுப்பினர்கள் அவ்வாறு செய்யக் கூடாது'' என்று சுற்றறிக்கையில் விளக்கியுள்ளனர். இதன்படி 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பினர் பெருமளவில் கோயில் கமிட்டிகளில் பங்கேற்று ஆதிக்கம் செலுத்துவதோடு, ''தேய்யம்'' எனும் விழாச் சடங்கின் போது அருள்வந்து ஆடவும் தொடங்கிவிட்டனர்.

நாடாளுமன்றத்தில் பங்கேற்று, அதை அம்பலப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கிகளாக சீரழிந்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகள் அதேவழியில், இந்து வெறியர்களை முறியடிப்பதாகக் கூறிக் கொண்டு, கோயில் கமிட்டிகளில் பங்கேற்று பக்திப் போதையில் இப்போது சாமியாடவும் கிளம்பிவிட்டனர். நல்ல முன்னேற்றம்தான்!

## கொந்தளிப்புகளைத் தணிக்க வஞ்சக வலை விரிக்கும் உலக வங்கி

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி - திவால் நிலையால் ஆசியாவில் இதுவரை எந்த நாடும் கண்டிராத வறுமையிலும் பட்டினியிலும் அந்நாட்டு மக்கள் பரிதவிக்கின்றனர். 1998-ஆம் ஆண்டின் அரசுக் கணக்குப்படியே நாட்டின் 50%-க்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியில் சிக்கித் தவிக்கின்றனர். பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து உலக வங்கி உத்தரவுப்படி, மானியங்கள் நிறுத்தப்பட்டதால் ரேஷன் கடைகள் மூடப்பட்டு ஒருவேளை கஞ்சிக்குக் கூட வழியின்றி மக்கள் திண்டாடினர். குமுறும் பட்டினிப் பட்டாளம் நகரங்களில் அங்காடிகளைச் சூறையாடத் தொடங்கியதும் இராணுவத்தை ஏவி அடக்குமளவுக்கு நிலைமை முற்றியது. இத்தகைய சமூக கொந்தளிப்புகள், தமது ஆதிக்கத்தையே பலி வாங்கிவிடும் என்று அஞ்சிய ஏகாதிபத்திய வல்லரசுகளும் உலக வங்கியும் இப்போது ''சமூக பாதுகாப்பு வலை'' எனும் திட்டத்துடன் மக்களின் கொந்தளிப்புக்கு வடிகால் வெட்டக் கிளம்பியுள்ளன.

ஒரு நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கி முடங்கிவிடும்போது, அரசாங்கமே சில சமூக நலத் திட்டங்கள் மூலம் மக்களிடம் வாங்கும் சக்தியை ஏற்படுத்தி பொருளாதாரத்தை சுழல வைக்க வேண்டும் என்பது, கீன்ஸ் என்ற முதலாளித்துவ பொருளாதார அறிஞரின் தீர்வாகும். இதன் வழியில் இந்தியாவில், பாசிச இந்திராவின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட வறுமை ஒழிப்பு - வறட்சி நிவாரணத் திட்டங்கள், ஆடு - மாடு வாங்க, பெட்டிக் கடை வைக்க கடனுதவி முதலான திட்டங்களைப் போலவே, இந்தோனேஷியாவிலும் சமூக பாதுகாப்பு வலை என்ற பெயரில் உலக வங்கி இத்திட்டங்களுக்கு கோடிக் கணக்கில் கடன் கொடுத்து செயல்படுத்த உத்திரவிட்டது. இதன்படி மலிவு விலையில் ரேஷன் அரிசி, சாலை மேம்படுத்தல் - தூர் வாருதல் முதலான நிவாரண வேலைத் திட்டங்கள், விவசாயிகளுக்கு சிறிய தொகையை கடன் கொடுக்கும் திட்டம் முதலானவை செயல்படுத்தப்பட்டன. ஆனால் இதனால் வறுமையில் வாழும் மக்களுக்கு எந்தப் பலனுமின்றி அதிகார வர்க்கமும் முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் விழுங்கி ஏப்பம் விட்டு, இத்திட்டங்கள் படுதோல்வியில் போய் முடிந்துள்ளன.

சாலை மேம்படுத்தல் போன்ற வேலை தரும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10% தொகைதான் வறுமையில் வாழும் மக்களுக்கு கூலியாகக் கிடைத்தது. அதிலும் பெருமளவு வேலையற்றோர் போட்டி போடுவதால் ஒருவருக்கு 2, 3 நாட்களுக்குத்தான் வேலை கிடைத்தது. மலிவு விலை ரேஷன் அரிசியை அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் சூறையாடியதால், பட்டினியில் தவிக்கும் மக்களுக்கு அரிசியே கிடைக்கவில்லை. எப்போதாவது அரைகுறையாக கிடைத்தாலும், 10 கிலோ அரிசி ஏறத்தாழ ரூ. 50-க்கு விற்கப்பட்டதால், மக்களால் அதை வாங்கவும் கையில் பணமில்லை. இதேபோல, சிறிய அளவு கடன் தரும் திட்டத்தால் நிலப்பிரபுக்களும் கந்து வட்டிக்காரர்களும் விவசாயிகளின் பெயரால் மோசடி செய்து ஆதாயமடைந்தனர். ஏறத்தாழ ரூ. 250 முதல் ரூ. 750 வரை கடன்பெற்ற கூலி - ஏழை விவசாயிகள் அத்தொகையைக் கொண்டு உணவுப் பொருள்களை வாங்க முடிந்ததே தவிர, விவசாய உற்பத்தியில் ஈடுபடுத்த முடியவில்லை.

ஆனாலும் உலக வங்கியும் இந்தோனேஷிய அரசும் வறுமையில் தவிப்போரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிட்டதாக, புள்ளி விபர சதவீத கணக்கு காட்டி சதிராடுகின்றன. திவாலான ஏழை நாட்டில் சமூக கொந்தளிப்புகளைத் தணிக்க சமூக பாதுகாப்பு வலை விரித்து ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆதிக்கத்தைத் தொடர எத்தனிக்கின்றனர். ஆனால் முதலாளித்துவ ஆட்சி முறையின் உடன் பிறப்பான இலஞ்சமும் ஊழலும் கொள்ளையும் அவர்களது எத்தனிப்புகளையே சீர்குலைத்து விட்டுள்ளதோடு, சமூக கொந்தளிப்புகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

## அணு ஆயுத எதிர்ப்புப் பேரணி: இந்து வெறியர்களின் தாக்குதல்

இந்துவெறி ஆட்சியாளர்கள் அகண்ட பாரதக் கனவுடன் அணுகுண்டு வெடிப்புச் சோதனை நடத்திய ஓராண்டு நிறைவு



படிப்பகம்

www.padippakam.com



நாளான மே 11-ந் தேதியன்று, பொஹ்ரானிலிருந்து சாரநாத் வரை ஓர் அமைதிப் பேரணியை அணு ஆயுத எதிர்ப்பாளர்களும் அமைதி இயக்கத்தினரும் நடத்த முற்பட்டனர். ராஜஸ்தானில் அணுகுண்டு வெடித்த பாலைவனப் பகுதியை அடுத்துள்ள கேடோலேய் கிராமத்தில் தமது பேரணியைத் துவக்கி உரையாற்றிய அவர்கள், மறுநாள் மே 12 அன்று பொஹ்ரான் நகரத்தை அடைந்ததும், நகருக்குள் நுழையக் கூடாது என்று இந்துவெறி குண்டர்கள் அவர்களை அச்சுறுத்தியதோடு தாக்கவும் செய்தனர். பின்னர் போலீசார் தலையிட்டு குண்டர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்த பிறகு பேரணி தொடர்ந்தது. இக்குண்டர்கள் உள்ளூர் பாரதீய ஜனதா எம்.எல்.ஏவினால் ஏவி விடப்பட்டவர்கள் என்பதை போலீசாரே ஒப்புக் கொண்டனர். பின்னர், அன்று மாலை காந்தி மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்த முற்பட்ட போது, மீண்டும் இந்துவெறி குண்டர்கள் வந்து தாக்கினர். மக்களிடம் விநியோகிக்க வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களையும் புத்தகங்களையும் கிழித்தெறிந்து, ''எங்கள் நாட்டுக்கு அணுகுண்டு தான் வேண்டும்; அமைதி வேண்டாம்'' என்று அவர்கள் ஊளையிட்டனர்.

மே 13 அன்று ராம்தேவ்ரா நகரை இப்பேரணி சென்றடைந்த போது, உள்ளூர் மக்கள் அமைதி இயக்கத்தினரை வரவேற்று ராம்தேவ் கோயில் பூசாரி தலைமையில் பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தனர். அங்கேயும் இந்துவெறி குண்டர்கள் வந்து கலாட்டா செய்து தாக்கினர். இக்கொடுஞ்செயலை எதிர்த்து அமைதி இயக்கத்தினரும் உள்ளூர் மக்களும் தர்ணா போராட்டம் நடத்தியதும், ஆத்திரமடைந்த இந்துவெறியர்கள் அவர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தினர். இதில் பலர் படுகாயமடைந்தனர். பின்னர் போலீசார் வந்து இந்து வெறியர்களை சமரசப்படுத்தி அனுப்பிய பிறகு, அமைதிப் பேரணி அடுத்த ஊருக்குப் புறப் பட்டது.

மே 16 அன்று இப்பேரணி பலாவ்தி நகரை அடைந்தபோது, 150-க்கும் மேற்பட்ட இந்து வெறி குண்டர்கள் தலையில் காவித் துணிப் பட்டையுடன் திரண்டு நின்று பேரணியைத் தடுத்து நிறுத்தினர். பேரணியைத் தொடர்ந்து நடத்தினால் உரிய முறையில் பாடம் புகட்டுவோம் என்று அச்சுறுத்தினர். இதைத் தொடர்ந்து அமைதி இயக்கத்தினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதும் போலீசார் இந்துவெறி குண்டர்களுடன் நீண்ட நேரம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை அனுப்பி வைத்தனர். இப்படி வழியெங்கும் இந்துவெறி குண்டர்களின் தாக்குதல் - அச்சுறுத்தலுடன் இவ்வமைதிப் பேரணி தொடர்கிறது.

சென்னையில் மே 11 அன்று தி. நகரில் அணு ஆயுத எதிர்ப்பாளர்கள் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தியபோது, அதை எதிர்த்து கையளவேயான இந்துவெறி குண்டர்கள் தேனாம்பேட்டை அண்ணாசாலை சந்திப்பில் சாலை மறியலில் ஈடுபட்டனர். பின்னர் போலீசார் அவர்களைச் சமரசப்படுத்தி அனுப்பினரே தவிர, இச்சட்டவிரோதச் செயலுக்காக அவர்களைக் கைது செய்யவில்லை.

ஜனநாயக ரீதியிலான, அமைதி வழியிலான கண்டன எதிர்ப்பைக்கூட சகித்துக் கொள்ளாத கடைந்தெடுத்த பாசிஸ்டுகள்தான் இந்துவெறியர்கள் என்பதை இவை நிரூபித்துக் காட்டுகின்றன. இப்பாசிஸ்டுகளின் தலைமையிலான தேர்தல் கூட்டணிக்குப் பெயர் தேசிய ஜனநாயக முன்னணியாம்! வெட்கக் கேடு!



**இந்துவெறி குண்டர்களின் கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து கிரிஷ் கர்னாட் தலைமையிலான ஆர்ப்பாட்டம். உள்ளே: சமுதாயா நாடகக்குழு தலைவர் குண்டண்ணா.**

## கலைஞர்கள் மீது பாயும் இந்துவெறி குண்டர்படை

இந்து கலாச்சார பாசிசத்தைத் திணிக்கும் நோக்கத்துடன் உசைன், ஜதின்தாஸ் ஆகிய ஓவியர்கள் மீது தாக்குதல், பாகிஸ்தானிய கஜல் பாடகர்களின் நிகழ்ச்சிகளுக்குத் தடை விதித்து அச்சுறுத்தல், ''ஃபயர்'' எனும் சினிமாப் படத்தைத் திரையிட்ட அரங்குகளைச் சேதப்படுத்தி வெறியாட்டம் என கலைஞர்கள், திரைப்படங்கள் மீது தாக்குதல் நடத்திவரும் இந்துவெறி குண்டர்கள், அண்மையில் பெங்களூர் அருகே ''சமுதாயா'' நாடகக் குழு தலைவர் மீதும் கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சமுதாயா நாடகக்குழு பெங்களூரில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தெரு நாடகங்கள், பாடல்கள், கவிதைகள் மூலம் மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகிறது. 'மார்க்சிஸ்டு' கட்சி ஆதரவாளர்களும் முற்போக்கு சிந்தனை கொண்ட கலைஞர்களும் அறிவுத்துறையினரும் ''சமுதாயா'' குழுவில் செயல்படுகின்றனர். பெங்களூர் அருகிலுள்ள அனேகல் நகரில் இக்குழுவினர் ''காவி - வெள்ளை - பச்சை'' எனும் நாடகத்தை நடத்தி மக்களின் வரவேற்பைப் பெற்றனர். இம்மூவண்ணம், போருக்கும் வெறுப்புக்கும் எவ்வாறு ஒரு கருவியாக உள்ளது என்பதை இந்நாடகம் விளக்குகிறது. இதனால் ஆத்திரமடைந்த இந்துவெறியர்கள், பா.ஜ.க. கவுன்சிலர் நாகராஜ் தலைமையில் திரண்டு சமுதாயா நாடகக் குழுத் தலைவர் குண்டண்ணாவையும் அவருடன் சென்ற சி.ஐ.டி.யு. தொழிற்சங்க முன்னணியாளரையும் அரிவாள், கத்தி, கட்டைகளைக் கொண்டு கொடூரமாகத் தாக்கியுள்ளனர். படுகாயமடைந்த குண்டண்ணா, உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு உயிர் பிழைத்துள்ளார். தம்முடன் மோதிவரும் போட்டி தொழிற்சங்கத்தின் தலைவர் என்று தவறாகக் கருதி தாக்கிவிட்டதாக நாகராஜ் தலைமையிலான கும்பல் இப்போது பசப்பி வருகிறது.

சமுதாயா நாடகக் குழு மீதான தாக்குதல் இப்போது முதன் முறையாக நடப்பதல்ல; 1995-இல் சமூக சீர்திருத்தவாதியான பசவண்ணாவின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ''மகாசைத்ரா'' எனும் நாடகம் நடத்தப்பட்ட போது இந்துவெறி - சாதிவெறி குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். கடந்த ஏப்ரல் 24-ந் தேதியன்று தார்வாட் மாவட்டத்தில் சமுதாயா குழுவின் துணைத் தலைவர் இந்துவெறியர்களால் தாக்கப்பட்டு, அவரிடமிருந்து பிரச்சார புத்தகங்கள் கிழித்தெறியப்பட்டன.

இந்துவெறியர்களின் தாக்குதலைக் கண்டித்து பிரபல நாடகக் கலைஞரான கிரிஷ் கர்னாட் தலைமையில் கலைஞர்களும் அறிவுத் துறையினரும் கடந்த மே 4-ந் தேதியன்று அனேகல் நகரில் தர்ணா போராட்டம் நடத்தியுள்ளனர். மே 7-ந் தேதியன்று டெல்லியில் பல்வேறு முற்போக்குக் கலைஞர்களும், அறிவுத் துறையினரும், பத்திரிகையாளர்களும் இத்தாக்குதலை எதிர்த்து கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தியுள்ளனர். ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு வீதி நாடகக் கலைஞரான சப்தார் ஹஷ்மி, பட்டப் பகலில் தலைநகர் டெல்லி அருகே ஷாகிபாபாத் நகரில் காங்கிரசு குண்டர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார். அத்தகைய பயங்கரவாதத் தாக்குதல் மூலம் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கிவிட இந்துவெறி கும்பல் தீர்மானித்துள்ளதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



கர்நாடகத்தில் கலைஞர்கள் மீதான இந்துவெறியர்களின் தாக்குதலுக்கு இன்னொரு காரணமும் உள்ளது. மைசூரை ஆண்ட மாவீரன் திப்பு சுல்தானின் 200-வது ஆண்டு விழாவை கடந்த மே 15-ந் தேதியிலிருந்து கர்நாடக அரசு நடத்தி வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகிய திப்பு சுல்தானை முஸ்லிம் மதவெறியனாக சித்தரித்து அவதூறு பிரச்சாரம் செய்துவரும் இந்துவெறியர்கள், இவ்விழாவை எதிர்த்து பல இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். அதேசமயம் முற்போக்கு கலைஞர்களும் அறிவுத் துறையினரும் மாவீரன் திப்பு சுல்தானின் நினைவைப் போற்றி பல புதிய கலை - இலக்கிய, வரலாற்று படைப்புகளை அரங்கேற்றி வருகின்றனர். அரசு விழாவில் கிரிஷ் கர்னாடின் ''திப்புவின் கனவுகள்'' எனும் நாடகமும், சமுதாயா குழுவின் நாடகங்களும் நடைபெற உள்ளன. இவை தவிர திப்புவின் வீரத்தையும் வாழ்வையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், அவரது சீர்திருத்த, மத நல்லிணக்க நடவடிக்கைகளையும் விளக்கும் வரலாற்று ஆய்வு நூல்கள் வெளிவர உள்ளன. இதனாலேயே இந்துவெறி கும்பல் ஆத்திரமடைந்து, முற்போக்குக் கலைஞர்கள் - சிந்தனையாளர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கிறது.




வெள்ளை நிறவெறிக்கு எதிரான உரிமைப் போர்: மும்மியாவை விடுதலை செய்யக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம்.

''மும்மியாவை விடுதலை செய்!'' கருப்பின மக்களின் உரிமைப் போர்

ஆப்பிரிக்க அமெரிக்கரும் கருப்பினப் போராளியும் அரசியல் கைதியுமான மும்மியா அபு ஜமாலை விடுதலை செய்யக் கோரி, அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் கடந்த ஏப்ரல் 24-ந் தேதியன்று 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். அதேநாளில், பிலடெல்பியா மாநிலத்தில் 10,000-க்கும் மேற்பட்டோர் திரண்டு மும்மியாவை விடுதலை செய்யக் கோரி பேரணி நடத்தினர். அமெரிக்கா மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளிலும் இதே கோரிக்கையுடன் ஊர்வலங்கள் நடந்துள்ளன.

''குரல் இழந்தவர்களின் குரல்'' என்றழைக்கப்படும் மும்மியா, மனித உரிமைக்காகவும் சமூகப் பிரச்சினைகளுக்காகவும் அமெரிக்காவின் வெள்ளை நிறவெறிக் கொடுமைக்கெதிராகவும் தொடர்ந்து போராடியவர். கறுஞ்சிறுத்தைகள் அமைப்பிலும் பின்னர் ''மூவ் (move)'' எனப்படும் முற்போக்கு கருப்பர் இயக்கத்திலும் செயல்பட்டவர். 1978-இல் ''மூவ்'' தலைமையகத்தை அமெரிக்க நிறவெறி போலீசார் குண்டு வீசித் தாக்கியதை எதிர்த்து மும்மியா உறுதியாகப் போராடினார். சிறுபான்மை கருப்பின மக்களின் உரிமைக்காகவும் அமெரிக்காவில் குடியேறிய சிறுபான்மை மக்களின் உரிமைக்காகவும், தூக்கு தண்டனைக்கு எதிராகவும் தொடர்ந்து அவர் போராடி வந்தார். 1982-இல் ஒரு போலீசுக்காரரை சுட்டுக் கொன்றதாக பொய்க் குற்றம் சாட்டப்பட்டு கைதான மும்மியாவுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதை ஒட்டி நடந்த விசாரணைகளும் குற்ற அறிக்கையும் மோசடியானவை என்று நிரூபணமான போதிலும், அமெரிக்க நிறவெறி அரசு மும்மியாவை விடுதலை செய்யவில்லை.

1960-களில் நடந்த கருப்பின மக்களின் எழுச்சியின்போது பிரபலமான ''அனைத்து அதிகாரமும் மக்களுக்கே!'' என்ற முழக்கத்துடன் இப்பேரணி தொடங்கியது. மும்மியாவை விடுதலை செய்! என்ற கோரிக்கையுடன் நடந்த இந்தப் பேரணி, அமெரிக்காவின் சிறுபான்மை மக்களின் உரிமைக்கும், உலகெங்கும் ஒடுக்கப்பட்ட நாடுகள் - மக்களின் உரிமைக்கும் போர்க்குரல் எழுப்பியது. இந்தப் பேரணியில் கருப்பின மக்கள் மட்டுமின்றி, கம்யூனிஸ்டுகள், மனித உரிமைக் குழுக்கள், நிறவெறி - இனவெறி எதிர்ப்பாளர்கள், ஆசிய - ஆப்பிரிக்க - தென் அமெரிக்க சிறுபான்மை மக்கள் எனப் பலதரப்பு மக்களும் பங்கேற்றனர். மும்மியாவை விடுதலை செய்யக் கோரி நடந்த இப்பேரணி, சிறுபான்மை இன மக்களின் உரிமைப் போராட்டமாகவே அமைந்தது.

மும்மியைப் போலவே அமெரிக்காவில் 3000-க்கும் மேற்பட்ட சிறுபான்மை மக்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ளனர். வெள்ளையர்களை விட சிறுபான்மை கருப்பினத்தவர் மீதே இத்தண்டனை திணிக்கப்படுகிறது என்று ஆய்வுகள் மூலம் மனித உரிமைக் குழுக்கள் அம்பலப்படுத்துகின்றன. அமெரிக்கப் போலீசுத் துறையிலும் சட்டம் - நீதித் துறையிலும் வெள்ளை நிறவெறி ஆதிக்கம் நிலவுதை அவை தோலுரித்துக் காட்டியுள்ளன.

ஐ.பி.எம்., மோட்டரோலா, போயிங், மைக்ரோசாப்ட் முதலான அமெரிக்க ஏகபோக தொழில் நிறுவனங்கள், சிறைக் கைதிகளைக் கட்டாயமாக கூலிக்கு அமர்த்திக் கொண்டு கொழுத்த இலாபம் ஈட்டி வருகின்றன. 8 மணி நேர வேலைக்கு வெறும் 2 டாலர் மட்டுமே கூலியாகக் கொடுத்து சிறுபான்மை சிறைக் கைதிகளை ஒட்டச் சுரண்டுகின்றன. சிறைக் கைதிகள் இக்கொடுமைக்கெதிராக போராடவோ, சங்கம் வைக்கவோ முடியாது.

இத்தகைய நிறவெறிக் கொடுமைகளால் குமுறிக் கொண்டிருந்த சிறுபான்மை மக்களின் குரலை எதிரொலிப்பதாகவே மும்மியாவின் விடுதலைக்கான போராட்டம் நடந்துள்ளது. 1995-இல் மும்மியாவின் தூக்கு தண்டனைக்கு 10 நாட்களுக்கு முன்பாக உலகெங்கும் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் அமெரிக்க நிறவெறி அரசு தண்டனையை நிறைவேற்றுவதை ஒத்தி வைத்தது. இப்போது மும்மியாவின் விடுதலைக்காகத் தொடரும் போராட்டம், உலகெங்கும் எதிரொலித்து அமெரிக்கக் காட்டுமிராண்டிகளைத் தனிமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# ஆந்திராவில் தொடரும் அரசு பயங்கரவாத வெறியாட்டம்

**ஆந்திராவில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டுமல்லாது, சட்டபூர்வ சனநாயக உரிமைகளுக்காகப் போராடும் பொது மக்களும் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.**

**யா**தையா, ஆந்திர மாநிலம் மேடக் மாவட்டத்திலுள்ள கோகுலபுர் கிராமத்தைச் சேர்ந்த பள்ளிச் சிறுவன். 21.06.'98 அன்று யாதையாவை, அவனது வீட்டில் இருந்து ஆள்காட்டி மூலம் அழைத்துச் சென்ற ஆந்திர போலீசு, அடுத்த மூன்று மணி நேரத்தில், அச்சிறுவனைச் சுட்டுக் கொன்றது. யாதையாவும், அச்சிறுவனோடு பிடித்துச் செல்லப்பட்ட 19 வயதான வெங்கடி என்ற இரு நக்சல்பாரி தீவிரவாதிகளும் மோதலின் பொழுது சுட்டுக் கொல்லப்பட்டதாக போலீசு செய்தி வெளியிட்டது.

போலீசு கூறியுள்ள மோதல், ஒரு கட்டுக்கதை என்பது ஒருபுறமிருக்கட்டும்; ஆந்திர போலீசு, யாதையாவை என்ன காரணத்திற்காக, அவன் தாயின் கண் முன்னாலேயே சுட்டுக் கொன்றது என்பதைத் தெரிந்து கொள்ளும் போதுதான், எத்தகையதொரு கொடிய பாசிச காட்டாட்சி ஆந்திர மக்களின் மீது ஏவிவிடப்பட்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

யாதையா, சில ஆண்டுகள் முன்பு வரை மும்பய் நகரில் வசித்து வந்திருக்கிறான். இதன் காரணமாக, நாட்டு நடப்புகளைப் பற்றிய அறிவு அவனிடம் ஓரளவு இருந்தது. மும்பையை விட்டு வெளியேறி, கோகுலபுரில் குடியேறிய பின்பு, யாதையா கோகுலபுரில் தான் படித்து வந்த பள்ளிக்கூடத்தில் மாணவர் அமைப்பொன்றைக் கட்டினான்.

''பொறுப்பான சிறுவன்'' என நாம் வேண்டுமானால் யாதையாவைப் பாராட்ட முன்வரலாம். ஆனால், ஆந்திரப் போலீசின் கிரிமினல் மூளையோ, ''சிறுவனாக இருக்கும்பொழுதே மாணவர் அமைப்பைக் கட்டிய யாதையா, வளர்ந்து இளைஞனான பிறகு நக்சலைட்டாகதான் மாறுவான்'' எனக் கணக்கு போட்டது; யாதையாவை முளையிலேயே கிள்ளியெறிந்துவிட்டது.

ஆந்திராவில், தெலுங்கானா பகுதி என்றழைக்கப்படும் கரீம் நகர், வாராங்கல், மேடக், நிஜாமாபாத் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் நக்சல்பாரிகளை மட்டும், ஆந்திர போலீசு சட்ட விரோதமான முறையில், மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லவில்லை. யாதையா போன்று ஓரளவு கல்வியறிவு பெற்ற இளைஞர்கள், தொழிற் சங்கங்களில் தீவிரமாகப் பணியாற்றும் தொழிலாளர்கள், சாதிப் பிளவுகளும், மோதல்களும் மறைய வேண்டும் என விரும்புவோர் - இப்படிப்பட்டவர்களைக் கூட, ஆந்திரப் போலீசு விட்டு வைப்பதில்லை.

• வாரங்கல் மாவட்டத்திலுள்ள நிஜாமாபள்ளி என்ற கிராமத்தில் இயங்கி வரும் நவயுக் இளைஞர் அமைப்பு, அக்கிராம மக்களிடையே நிலவி வரும் சாதி வேறுபாடுகளைக் களையும் முயற்சியாக, 3.10.98 அன்று சமபந்தி விருந்தொன்றை அக்கிராமத்தில் நடத்தியது. இச்சீர்திருத்த நடவடிக்கையினைக் கூடச் சகித்துக் கொள்ள முடியாத ஆந்திர போலீசு, அவ்விருந்தினை நடத்தியவர்களை நக்சல்பாரிகள் என முத்திரை குத்தியது. அக்கிராமத்தைச் சேர்ந்த பிரபாகர் என்ற ஆசிரியரையும், நவயுக் அமைப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் மிருகத்தனமாகத் தாக்கியதோடு, அவ்விருவரையும் சட்ட விரோதக் காவலில் அடைத்தது.

• கல்வி, சுற்றுபுறச் சூழல் போன்ற பிரச்சினைகளை முன்னிறுத்தி, தெலுங்கானாப் பகுதியில் இயங்கிவரும் அமைப்பான சினேகா கலாச்சாரக் குழுவைச் சேர்ந்த செயல் வீரர் எல்லம் என்பவரை, 4.11.98 அன்று நள்ளிரவில் தமாலா கிராமத்தில் இருந்து தூக்கிச் சென்ற ஆந்திர போலீசார், அவரைக் கொன்றுவிட்டு மோதலில் இறந்ததாகக் கதை கட்டினர்.

• இப்படுகொலை நடந்த மூன்றாவது நாளில், 7.11.98 அன்று, நிஜாமாபாத் மாவட்டத்திலுள்ள சென்னாபுர் என்ற கிராமத்தில் இயங்கி வரும் சுஜ்ஜித் ஸ்டார்ச் ஆலையைச் சேர்ந்த மூன்று தொழிலாளர்கள் ஆந்திரப் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். மறுநாள், ஆலையில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள வனப்பகுதியில், துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட இம்மூன்று தொழிலாளர்களது சடலங்கள், வீசியெறியப்பட்டுக் கிடந்தன. இம்மூன்று தொழிலாளர்களையும் போலீசார் கைது செய்து தூக்கிச் சென்றதை நேரில் பார்த்த பல சாட்சியங்கள் இருந்த போதிலும், இம்மூன்று தொழிலாளர்களும் ஆயுத மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி தீவிரவாதிகள் என ஆந்திர போலீசு புளுகியது.

மேடக் மாவட்டத்திலுள்ள நவாப் பெட் கிராமத்தில் தங்கியிருந்த, மக்கள் யுத்தக் குழுவின் ஏழு நக்சல்பாரி புரட்சியாளர்களைச் சுற்றி வளைத்து, எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாது சுட்டுக் கொன்ற ஆந்திர போலீசு, அப்போலி மோதலில் அக்கிராமத்தைச் சேர்ந்த பூலட்சுமி என்ற அப்பாவிப் பெண்ணையும் சுட்டுக் கொன்றனர். குண்டடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பூலட்சுமியை, மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லுவதற்குக்கூட போலீசு உயர் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. குண்டடிபட்ட இடத்தின் வழியாக, அவரின் உடம்பில் இருந்த இரத்தம் அனைத்தும் வெளியேறி, பரிதாபமாக இறந்து போனார் பூலட்சுமி.

இதேபோன்று, 11.12.98 அன்று கரீம் நகர் மாவட்டத்திலுள்ள தம்மண்ணாபேட் கிராமத்தில் நடந்த போலி ஆயுத மோதலில், ''ஜனசக்தி'' குழுவைச் சேர்ந்த 8 புரட்சியாளர்களோடு, அவர்களுக்குத் தங்க இடம் கொடுத்த மூன்று பேரையும் ஆந்திர போலீசு சுட்டுக் கொன்றது.

1990-இல், ஆந்திரப் போலீசால் சட்ட விரோதமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்களின் எண்ணிக்கை இருபது. இச்சட்ட விரோத, போலி மோதல் படுகொலைகள் அடுத்தடுத்த ஆண்டுகளில் - 1992-ல் 256, 1996-இல் 161, 1997-இல் 159, 1998-இல் 290 ஆகவும் உயர்ந்தது.

ஆந்திராவில், சந்திரபாபு நாயுடு அரசாங்கம் தாராளமயக் கொள்கைகளைத்

**ஆந்திரப் போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டு, சித்திரவதை செய்துசுட்டுக் கொல்லப்பட்ட ஆந்திரப் புரட்சிகர மாணவர் சங்கத் தலைவர்கள்**


வீராசாமி


புஜேந்திர ரெட்டி



படிப்பகம்

www.padippakam.com

தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கும், நக்சல்பாரி புரட்சியாளர்கள் இப்போலி மோதல் படுகொலைகள் மூலம் கொல்லப் படுவது அதிகரித்து வருவதற்கும் தொடர்புண்டு. நாம், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடவில்லை. உலகின் பிரச்சினைக்குரிய பகுதிகளில் எல்லாம், பன்னாட்டு மூலதனம் படையெடுப்பதற்கு வசதியாக 'அமைதி' ஒப்பந்தங்களைத் திணித்து வரும் ஏகாதிபத்தியங்கள், தெலுங்கானாவில் ''நிலைத்த தன்மை''யை விரும்புகின்றன.

ஏகாதிபத்தியங்கள் விரும்பும் இந்த நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக, ஆந்திர மாநில அரசால் ''வேட்டை நாய்கள்,'' ''சிறப்பு அதிரடிப் படை'' என்ற இரு சட்டபூர்வ கொலைகாரப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. தெலுங்கானா பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் காலரா - மலேரியா போன்ற தொற்று நோய்கள் தாக்கி, ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டு வருகின்றனர். இத்தொற்று நோய்களை ஒழிக்க நிதி ஒதுக்காத ஆந்திர அரசு, நக்சல்பாரி புரட்சியாளர்களையும், போராடும் மக்களையும் தேடி அழிப்பதற்காக, கோடிக் கணக்கான ரூபாய் செலவில் ''ஹெலிகாப்டரை'' வாங்கி விட்டுள்ளது. கையெறி குண்டுகள், நாட்டு வெடி குண்டுகள், நச்சுவாயுக்கள், நிலக் கண்ணி வெடிகள் - இப்படி பல வகையான நவீன, கொடிய ஆயுதங்களைப் பயன்படுத்தி நக்சல்பாரி புரட்சியாளர்களையும், அவர்களை ஆதரிக்கும் மக்களையும் நர வேட்டையாடி வருகிறது, ஆந்திர போலீசு.

சந்திரபாபு நாயுடு தெலுங்கானா பகுதியில் உருவாக்கிவிடத் துடிக்கும் நிலைத்த தன்மையின் உண்மையான பொருள், நிலவுடமை உறவுகளைக் கட்டிக் காப்பது தான். போலி கம்யூனிஸ்டுகள் தொடங்கி, எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இந்த நிலவுடமை உறவுகளை எதிர்ப்பது கிடையாது. நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டும்தான் தெலுங்கானா பகுதி மக்களை அணிதிரட்டி, இந்த நிலவுடமைச் சுரண்டல் - ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

அதனால்தான், நக்சல்பாரி புரட்சியாளர்களை அரசு பயங்கரவாதத்தின் மூலம் மட்டுமல்லாமல், கட்சிக்குள்ளேயே ஐந்தாம் படைகளை உருவாக்கி அழித்துவிடத் துடிக்கிறார், சந்திரபாபு நாயுடு. நக்சல்பாரி புரட்சியாளர்களை மட்டுமல்லாமல், அவர்களது உறவினர்களைக் கொன்றொழிப்பதன் மூலமும், நக்சல்பாரிகளை ஆதரிக்கும் விவசாயிகளின் வீடுகளையும், தானியங்களையும் தீயிட்டுக் கொளுத்துவதன் மூலமும், கிராமப் பெண்களின் மீது பாலியல் வன்முறையை ஏவிவிடுவதன் மூலமும், நக்சல்பாரிகளை ஆதரிக்கும் கிராமங்களுக்கு எவ்வித வசதியும் செய்து தராமல் தனிமைப்படுத்துவதன் மூலமும் பயபீதியூட்டி, நக்சல்பாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான உறவை அறுத்து விடத் துடிக்கிறார். நக்சல்பாரிகள் தலைமையில் நிலத்திற்காகவும், ஜனநாயக, பொருளாதார உரிமைகளுக்காகவும் போராடி வரும் தெலுங்கானா பகுதி மக்களின் மீது, சந்திரபாபு நாயுடு அரசாங்கம், அறிவிக்கப்படாத ஓர் உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்றுதான் கூற வேண்டும்.

கடந்த மார்ச் மாதம், ஆந்திர மாணவர் சங்கத்தின் தலைவர் வீராசாமியும், செயலர் மகேஷும் ஆந்திரப் போலீசின் வேட்டை நாய்கள் படைப் பிரிவினரால் கடத்திச் செல்லப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களோடு கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்ட அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் தலைவர் ஜெயராமச்சந்திரனிடம், வேட்டை நாய்கள் படைப் பிரிவின் அதிகாரி, ''இங்கே ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது; இதில் நீதி, நேர்மை, நியாயங்களுக்கு இடமே இல்லை'' என்று கூறியுள்ளான்.

பாசிஸ்டுகளிடம் நீதியை எதிர்பார்க்க முடியாதுதான்; ஆனால், மக்களை அணிதிரட்டி இந்த பாசிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவதன் மூலம், புதிய நீதியை, உழைக்கும் மக்களுக்கான நீதியை நிலைநாட்டிட முடியும்; அதுதான் இன்றைய தேவையும் கூட!

• ரஹீம்

**தலையங்கம் தொடர்ச்சி**

இந்தியாவும் பாகிஸ்தானும் கூறு போட்டுக் கொண்டுள்ள ஜம்மு - காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து, 50 ஆண்டுகளுக்கு மேலாக, அதை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில், தீராத தகராறில் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, 1965 போர், வங்கதேச பிரிவினையில் இந்தியாவின் பங்கு-பாத்திரம் காரணமாக பாகிஸ்தான் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆள் நடமாட்டமே இல்லாத, ஆண்டு முழுவதும் பனி மூடி இருக்கும் சியாசின் பகுதியில் ஆண்டுக்குப் பல கோடி ரூபாய் விரயம் செய்யும், பல உயிர்களைப் பலி கொள்ளும், தாழ் நிலைப் போர் நீண்ட காலமாக நடந்து வருகிறது.

தற்போது இந்தியாவிடம் உள்ள லடாக் பகுதிக்குச் செல்லும் சிறீநகர் - கார்கில் - லெ நெடுஞ்சாலையைக் கைப்பற்றிக் கொண்டால் லடாக், சியாசின் பகுதிகளில் உள்ள இந்திய இராணுவத்தின் போக்குவரத்து வசதிகளை முடக்கிவிட முடியும். இதற்காகவே தராஸ் - கார்கில் - பட்டாலிக் பகுதியின் மலை முகடுகளில் பதுங்கு குழிகள் வெட்டி, நவீன ஆயுதங்களுடன் இறங்கியுள்ளது பாக். இராணுவம். இதைத் தடுக்கத் தவறிய இந்திய அரசு ஊடுருவல்காரர்களை விரட்டும் தாழ்நிலை போரைத் துவங்கி, மூன்று விமானங்களையும் நூறுக்கும் மேலான இராணுவத்தினரையும் இழந்துள்ளது. கார்கில் நகரில் உள்ள இந்திய உணவுக் கழகக் கிடங்கு, எண்ணெய் எரிபொருள் கிடங்கு, ஆயுதக் கிடங்கு, இராணுவ வாகனப் பட்டறை, கட்டுமான நிலையில் உள்ள விமான நிலையம், வானொலி - வானொளி நிலையங்கள், உயர் போலீசு அதிகாரிகளின் வீடு - அலுவலகங்கள் பாக். இராணுவத்தின் குண்டு வீச்சில் அழிந்து போயுள்ளன.

பல மாதங்கள் நீடிக்கக் கூடிய இப்போரில் இந்திய இராணுவம் சாதகமான நிலையில் இருப்பதாகக் கூறப்படுவதெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என இராணுவ வல்லுநர்கள் கூறுகின்றனர். தோல்வி முகம் கண்டுள்ள பாக். அமைதிப் பேச்சுக்குத் துடிக்கிறது என்பதும் உண்மையல்ல. காஷ்மீர் பிரச்சினையை உள்ளடக்காத எந்தப் பேச்சு வார்த்தைக்கும் பாக். மசியாது. இராணுவ வலிமையைக் கொண்டு காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாக். - இந்திய முயற்சிகள் ஒரு போதும் வெற்றி பெறாது. தீராத தலைவலி, திருகுவலியாக மாறவே உதவும். ஆனால் பிரச்சினை தீருவதற்கு இருநாட்டு இராணுவமும் நிலை கொண்டிருப்பது, காஷ்மீர் தேசம் கூறு போடப்பட்டுள்ள நிலை, தீராத போர் ஆகியவற்றை வெறுக்கும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு விடுவதே ஒரே வழி. எனவே இரு நாடுகளும் அதற்கான முயற்சியில் இறங்கி, உடனடியாகப் போரை நிறுத்துமாறு ஆளுவோரை நிர்பந்திப்பதுதான் உண்மையான நாட்டுப் பற்றாகும்.

**அட்டைப்பட விளக்கம்:**

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் தேர்தல் கூட்டணி அமைப்பது என்று முடிவு செய்த பின்பு, ஒரு பச்சோந்தியைப் போலத் தனது நிறத்தை மாற்றிக் கொண்டார் கருணாநிதி. 1998 தேர்தலுக்கு முன்பு, ''வகுப்புவாத-மதவெறி சக்தியான பா.ஜ.க.- ஆர்.எஸ்.எஸ்.-ஐ தமிழகத்தில் காலூன்றச் செய்ததன் மூலம் பெருங்கேடு விளைவித்து விட்டார்'' என்று ஜெயலலிதாவைச் சாடினார். 1998 பிப்ரவரி கோவைக் குண்டு வெடிப்புக்குக் காரணம் இசுலாமியத் தீவிரவாதிகள்தாம் என்றாலும், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். இந்து வகுப்புவாதச் செயல்களின் எதிர் விளைவுதாம் அவை என்று சொன்னார் கருணாநிதி. அன்று, தீவிரவாதப் பீதி கிளப்பி வகுப்புவாத பாசிச சக்திகளின் தோளோடு தோள் நின்றார் ஜெயலலிதா. இன்று, அதே வேலையைக் கருணாநிதி செய்கிறார். பாசிச பா.ஜ.க. - ஆர்.எஸ். எஸ்.உடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு வெடிகுண்டு புரளி கிளப்புகிறார். இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். பா.ஜ.க. அரசு அதே மதவாத அரசல்ல என்றும், தீவிரவாதிகளால் தான் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து என்று பூச்சாண்டிக் காட்டுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# 'பெரிய ஐயா'வுக்கு இந்தியன் வங்கி 'சின்ன ஐயா'வுக்கு சிட்டி யூனியன் வங்கி

தமிழகத்திலுள்ள கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் சிட்டி யூனியன் வங்கிக்கு, நாடெங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. நூறாவது ஆண்டைத் தொடவுள்ள இவ் வங்கி, பொது மக்களிடமிருந்து கிட்டதட்ட 1000 கோடி ரூபாய்க்கு மேல் சேமிப்பாகத் திரட்டியுள்ளது. நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில், பொதுத்துறை வங்கிகளில் போடப்பட்டிருந்த மக்களின் சேமிப்பு, பார்ப்பன உயர் அதிகாரிகள் - பங்குச் சந்தை தரகர்களால் சூறையாடப்பட்டதை போலவே, சிட்டி யூனியன் வங்கியின் உயர் அதிகார பார்ப்பனக் கும்பலொன்று, தனியார் முதலாளிகள் - அரசியல் வாதிகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு, இவ்வங்கியிலுள்ள 1000 கோடி ரூபாய் பெறுமான சேமிப்பை ஏப்பம் விடத் தீவிரமாக முயன்று வருகிறது.

சிட்டி யூனியன் வங்கியின் தலைவர் வீ. நாராயணன்; இவ்வங்கியின் தலைமைப் பொது மேலாளர் கே. வெங்கடராமன்; கோவை - இராம்நகர் கிளையின் மேலாளர் எஸ். விஸ்வேசன்; சென்னை - தி. நகர் கிளை மேலாளர் வீ. நாகராஜன்; சென்னை - ஜி.டி. கிளை மேலாளர் ராஜ கோபாலன்; மதுரைக் கிளை மேலாளர் - கண்ணப்பன்; மும்பய் - கார் (மேற்கு) கிளை உதவிப் பொது மேலாளர் எஸ். பால சுப்பிரமணியன்; சென்னை - தி. நகர் உதவிப் பொது மேலாளர் வீ. சுந்தர்; கும்பகோணத்திலுள்ள மைய அலுவலகத்தின் உதவிப் பொது மேலாளர்கள் வீ. கோபாலன் மற்றும் வீ. கிருஷ்ணன் - ''வாத்திமா'' என்ற பிரிவைச் சேர்ந்த இப்பார்ப்பனக் கும்பல்தான், சிட்டி யூனியன் வங்கியிலுள்ள 1,000 கோடி ரூபாய் சேமிப்பை பையப் பையச் சூறையாடி, அவ்வங்கியை திவாலாக்கிவிட முயன்று வருகிறது. சிட்டி யூனியன் வங்கியின் தலைமைப் பொது மேலாளராக இருக்கும் கே. வெங்கட்ராமன்தான், இக்கும்பலின் தலைவன்; கடந்த பல ஆண்டுகளாக இவ்வங்கியில் நடந்து வரும் ஊழல் - முறைகேடுகள் - மோசடிகள் அனைத்திற்கும் சூத்திரதாரி.

சிட்டி யூனியன் வங்கி மூலம் கோடிக் கணக்கில் கடன் பெறும் முதலாளிகளுள், தனக்கு வேண்டப்பட்ட முதலாளிகளின் கடன்களை ரத்து செய்து கமிசன் வாங்குவது; சொத்தின் மதிப்புக்கு மேலாகக் கடன் கொடுத்துவிட்டு, பின்னர் அக்கடன் தொகையில் பாதியைச் சுருட்டிக் கொள்வது - இவையிரண்டும் வங்கியிலுள்ள சேமிப்பைச் சூறையாடுவதற்கு கே. வெங்கடராமன் கும்பல் அடிக்கடி கையாளும் வழிமுறைகள்.


• சிட்டி யூனியன் வங்கியின் திருப்பூர் கிளை மூலம் திருப்பூர் செல்வராஜ் என்ற திரைப்படத் தயாரிப்பாளருக்கு, ''மக்களாட்சி'' என்ற திரைப்படத்தை தயாரிக்க, மூன்று கோடி ரூபாய் கடனாகக் கொடுத்து, பின்னர் அக்கடனை சட்ட விரோதமான முறையில் தள்ளுபடி செய்ததற்காக, கே. வெங்கடராமன் இலஞ்சம் பெற்றதை, ''பெப்சி'' திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம் அம்பலப்படுத்தியது.

• அத்தாட்சிப் பத்திரங்கள் எதுவும் இல்லாமல், வங்கி விதிகள், ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் மீறி, திருப்பூரில் உள்ள ''நேஷனல் டெக்ஸ் டைல்ஸ்'' என்ற நிறுவனத்திற்கு 2.5 கோடி ரூபாய் கடன் கொடுத்து மோசடி செய்ததிலும், சிட்டி யூனியன் வங்கியின் திருவல்லிக்கேணி கிளை, ''குவை இம்பெக்ஸ்'' என்ற நிறுவனத்தின் மூலம் செய்த 1.5 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மோசடியிலும் கே. வெங்கடராமனுக்கு பெரும் பங்குண்டு.

• மும்பய் ஹார்டுவெஸ்டு கிளையில் போலி நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்த வகையில் நடந்த ஐந்து கோடி ரூபாய் ஊழலில் கே. வெங்கடராமன் கும்பல் பெற்ற கையூட்டு கிட்டதட்ட 2 கோடி ரூபாய்.

இப்படி மறைமுகமாக, சட்ட விரோத வழிமுறைகளின் மூலம் வங்கிப் பணத்தைக் கொள்ளையடித்து வரும் கே. வெங்கடராமன் கும்பல், வாய்ப்புக் கிடைக்கும் பொழுது, மிகவும் வெளிப்படையாகவே வங்கிப் பணத்தைச் சுருட்டிக் கொள்வதுமுண்டு.

**தலைமைப் பொது மேலாளர் கே. வெங்கடராமன். ஊழல் கும்பலின் தளபதி.**



சில ஆண்டுகளுக்கு முன், வேலூரில் இருந்து சென்னைக்கு 1½ கோடி ரூபாய் வங்கிப் பணத்தை இக்கும்பல் எடுத்துச் சென்றது. செல்லும் வழியில் பணம் கீழே கொட்டிவிட்டது என்றும், பத்து இலட்ச ரூபாயை மட்டும்தான் தங்களால் பொறுக்கி எடுக்கி முடிந்ததாகப் புகார் கொடுத்துவிட்டு, மீதி ஒரு கோடியே நாற்பது இலட்ச ரூபாயை இக்கும்பல் பகற் கொள்ளையடித்து, பங்கு போட்டுக் கொண்டது.

இவைதவிர, பல்வேறு நகரங்களில் இயங்கும் வங்கியின் கிளைகளுக்காக சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக வாங்கும் நிலத்திலும், கட்டிடம் கட்டுவதிலும், சந்தையின் மதிப்பை விட பல மடங்கு அதிகம் விலை கொடுத்து நிலம் வாங்கப்பட்டதாகவும் கட்டிடத்திற்குச் செலவழிக்கப்பட்டதாகவும் போலி ஆவணங்கள் / ரசீதுகள் தயார் செய்து, பல இலட்சக் கணக்கான ரூபாயைக் கொள்ளையடித்து வருகிறது வெங்கடராமன் கும்பல். உதாரணமாக, வெங்கடராமனின் கைத்தடி மேலாளராக உள்ள கோவை இராம் நகர் கிளைக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டியதில் மட்டும் வெங்கடராமன் கும்பல் கிட்டதட்ட 50 இலட்ச ரூபாயைச் சுருட்டிக் கொண்டது. வங்கிக்கு ஊழியர்களை நியமிப்பது, ஊழியர்களைப் பணிமாற்றம் செய்வதில் மட்டுமல்லாது, பணி மாற்றம் செய்து விடுவேன் என மிரட்டியே வங்கி ஊழியர்களிடம் பணம் கறந்து விடுவதிலும் வெங்கடராமன் கும்பல் பலே கில்லாடிகள்!

இப்படி நாலா விதங்களிலும் வங்கிப் பணத்தைச் சூறையாடி வரும் வெங்கடராமன், இக்கள்ளப் பணத்தைக் கொண்டு சென்னை, கும்பகோணம், மும்பய், கொடைக்கானல் எனப் பல ஊர்களிலும் சொத்துக்களை வாங்கி குவித்து வருவதோடு, தனது கைத்தடிகளைக் கொண்டு இணையான வங்கியையும் இரகசியமாக நடத்தி வருகிறார். முன்பு வெங்கடராமனின் கைத்தடியாக இருந்த ஆடுதுறை கிளையின் முன்னாள் மேலாளர் வெங்கட்ராமன் மூலம் நடந்த 40 இலட்சம் ரூபாய் பெறுமான கடன் கொடுக்கல் - வாங்கலில் சிக்கல் ஏற்பட்டபொழுது, தலைமைப் பொது மேலாளர் வெங்கடராமன் கும்பல், ஆடுதுறை கிளையின் முன்னாள் மேலாளர் வெங்கடராமனையும், அவரது மனைவியும் 1.1.98 அன்று கடத்திச் சென்றது. அவர்கள் இருவரையும் உதவிப் பொது மேலாளர் கோபாலன் வீட்டில் சட்ட விரோதமாக அடைத்து வைத்து, கத்தியைக் காட்டி மிரட்டியே, (ஆடுதுறை முன்னாள் மேலாளர்) வெங்கட்ரமானிடமிருந்து பதவி விலகல் கடிதத்தையும், பல வெற்றுத்


படிப்பகம்

www.padippakam.com

தாள்களிலும், பத்திரங்களிலும் அவரது கையெழுத்தையும், வாங்கிக் கொண்டு விரட்டியடித்தனர்.

ஆடுதுறை கிளையில் மேலாளராக இருந்த வெங்கட்ராமன், தான் தலைமைப் பொது மேலாளர் வெங்கடராமன் கும்பலால் கடத்திச் செல்லப்பட்டதையும், தன்னை மிரட்டி அக்கும்பல் கையெழுத்து வாங்கியதையும், வெங்கடராமன் கும்பல் இரகசியமாக நடத்தி வரும் இணை வங்கியையும் போலீசில் புகாராகக் கொடுத்த பின்னும் கூட, வெங்கடராமன் கும்பல் மீது எந்தவொரு விசாரணையும் நடைபெறவில்லை. தன் மீது போலீசில் கொடுக்கப்படும் புகார்களைக் குப்பைக் கூடைக்கு அனுப்புவதற்காகவே, போலீசிலும் தனக்கு விசுவாசமான நாய்களை உருவாக்கி வைத்துள்ளது வெங்கடராமன் கும்பல். போலீசு ஆய்வாளர் மாணிக்கவாசகம் இக்கிரிமினல்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டதால், அவருக்கு ஒரு கார், ஒரு இலட்ச ரூபாய் ரொக்கப் பணம் எனக் கொட்டிக் கொடுத்தது வெங்கடராமன் கும்பல்.

வெங்கடராமன் கும்பலின் இந்த ஊழல் மோசடிகளின் காரணமாக, சிட்டி யூனியன் வங்கியின் வராத கடன் தொகை அதிகரித்து, இவ்வங்கி வெகு விரைவில் நிதி நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய அபாயம் எழுந்துள்ளது. இந்த திருட்டுக் கும்பலின் ஊழல் - மோசடி நடவடிக்கைகள் அனைத்தையும், வங்கி ஊழியர்களும், அ.தி.மு.க. உள்ளிட்ட பிற கட்சிகளும் அம்பலப்படுத்தி, ரிசர்வ் வங்கி, நிதிய மைச்சகம் எனப் பல உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்த பின்னும், வெங்கடராமன் கும்பல் இன்னும் சுதந்திரமாகதான் உலவி வருகிறது.

1995-ஆம் ஆண்டு தொடங்கியே வெங்கடராமன் கும்பலின் ஊழல்கள் சந்தி சிரிக்கத் தொடங்கிவிட்டன. ஆனாலும், மைய ஆட்சியில் இருந்த காங்கிரசோ, ஐக்கிய முன்னணியோ, பா.ஜ.க. கூட்டணியோ, வெங்கடராமன் கும்பல் மீது கூறப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுகள் குறித்து, விளக்கம் கேட்டு துண்டுக் காகிதத்தைக் கூட அனுப்பவில்லை.

த.மா.கா. தலைவர் கருப்பையா மூப்பனாரின் தம்பி 'சின்ன ஐயா' ஜி.ஆர். மூப்பனாரும், தமிழக உள்துறை அமைச்சர் கோ.சி. மணியும், இப்பார்ப்பனக் கும்பலின் மோசடி - சுருட்டல் அனைத்திலும் பங்கு போட்டுக் கொண்டு, அரசியல் பாதுகாப்பு கொடுப்பதுதான் இதற்குக் காரணம்!

'பெரிய ஐயா' மூப்பனார் கும்பலின் தயவினால், பெண் பித்தனான வீ. நாராயணன், சிட்டி யூனியன் வங்கியின் தலைவராக 18 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து வருவதோடு, தனது மகன் சிரீராமனையும், கொல்லைப்புற வழியில் இவ்வங்கியின் உதவிப் பொது மேலாளர் என்ற பசையுள்ள பதவியில் அமர்த்தி விட்டார்.



**சிட்டி யூனியன் வங்கித் தலைவர் வீ. நாராயணன்: ஊழல் கும்பலின் கைத்தடி.**

இதற்கு நன்றிக் கடனாக, அவர், வெங்கடராமனும், மூப்பனார் கும்பலும் இவ்வங்கியின் பணத்தைச் சூறையாடி வருவதை கண்டு கொள்வதேயில்லை.

த.மா.கா. தலைவர் மூப்பனாரின் மைத்துனர் இவ்வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை 3 கோடியே 25 இலட்சம்; த.மா.கா. தஞ்சை நகரத் தலைவர் செந்தில் நாராயணனுக்கு கொடுக்கப்பட்ட 35 இலட்ச ரூபாய் கடனுக்கு இன்றுவரை பந்தகப் பத்திரம் கூட எழுதி வாங்கப்படவில்லை. கோ.சி. மணியின் மகன் இளங்கோ, வெங்கடராமன் கும்பலுக்கு அடியாள் வேலை பார்த்து வருவதால், அவனுக்கு வங்கியில் ''எழுத்தர்'' என்ற பதவியைத் தூக்கிக் கொடுத்துள்ளனர்.

வங்கியின் பணத்தை கடன் என்ற பெயரில் வீசியெறிந்து, பிற கட்சிகளிலும் ஆள் பிடிக்கும் வேலையில் இறங்கியுள்ளது வெங்கடராமன் கும்பல். பா.ஜ.க. மாநிலச் செயலர்களில் ஒருவரான ஹெச். ராஜாவுக்கு காரைக்கால் கிளையின் மூலமும், கலைஞர் குடும்பத்தின் ''சன்'' தொலைக்காட்சிக்கு சென்னை - மந்தைவெளிக் கிளையின் மூலமும் சமீபத்தில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வெங்கடராமன் கும்பல் தனது தில்லுமுல்லுகளை சர்வகட்சி ஆதரவோடு, எதிர்ப்பே இல்லாமல் மூடிமறைத்துவிட முயலுகிறது.

எதற்கும் மயங்காமல், சிட்டி யூனியன் வங்கியில் நடந்து வரும் ஊழல் மோசடிகளை துணிந்து யாராவது அம்பலப்படுத்தினால், அவர்கள் மீது ரவுடிக் கும்பலை ஏவிவிட்டு ஒழித்துக் கட்டிவிடவும் மூப்பனார் - வெங்கடராமன் கும்பல் துணிந்துவிட்டது. சிட்டி யூனியன் வங்கியின் நிர்வாகக் குழுவில் ஊழியர் பிரதிநிதியாக இடம் பெற்றுள்ள கௌதமராஜன், 7.4.99 அன்று மூப்பனார் கும்பல் ஏவிவிட்ட ரவுடி கும்பலால் தாக்கப்பட்டது இதன் தொடக்கம் தான்.

வங்கிகளைத் தனியார்மயமாக்குவதற்கு, ''தனியார் நிர்வாகம் நடத்தும் வங்கிகளில் ஊழல் நடைபெறாது; மோசடி இருக்காது; எல்லாக் காரியங்களும் திட்டமிட்டபடி, முறையாக, திறமையாக நடைபெறும்; முக்கியமாக தனியார் வங்கிகளில் நட்டம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது'' என இந்திய அரசு பல காரணங்களை அடுக்குகிறது. ஆனால், சிட்டி யூனியன் வங்கி விவகாரம், வங்கிகளைத் தனியார்மயமாக்குவது - தாராளமயமாக்குவது என்பது, வங்கி அதிகாரிகள் - தனியார் முதலாளிகள் - அரசியல்வாதிகள் என்ற கிரிமினல் கூட்டணி, பொது மக்களின் பணத்தைத் தடையின்றிச் சூறையாடுவதற்கு ஏற்படுத்தித் தரப்படும் மற்றுமொரு புதிய வாய்ப்பு என்பதை முன்கூட்டியே எச்சரிப்பதாக உள்ளது.

அரசியல் செல்வாக்குடன் சிட்டி யூனியன் வங்கியைச் சூறையாடி வரும் வெங்கடராமன் - மூப்பனார் - கோ.சி. மணி கும்பலை அவ்வங்கி ஊழியர்கள் மட்டுமே போராடி வீழ்த்திவிட முடியாது; தி.மு.க., த.மா.கா. அல்லாத பிற ஓட்டுக் கட்சிகளையும் முழுமையாக நம்பிவிட முடியாது. இக்கிரிமினல் கும்பலுக்கு போராட்டத்தை, வங்கிகள் தனியார்மயமாக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துடன் இணைப்பதும், பொது மக்களின் ஆதரவைக் கோரிப் பெறுவதும் இன்றியமையாததாகும்.

**தகவல்:**
**ம.க.இ.க. தஞ்சை**


**சீனாவின் மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ''சிகப்பு நூல்'' - இப்பொழுது மீண்டும் தமிழில். இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் தோழமைக் கரங்களிலெல்லாம் இருக்க வேண்டிய உலகப் பொதுநூல், இப்பொழுது உங்கள் பார்வைக்கும்...**

## ''மா சே துங் மேற்கோள்கள்''

**விலை ரூ. 50/-ஐ எமது முகவரிக்குப் பணவிடை செய்து, நூலினை அஞ்சலில் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் செலவு இலவசம்; வி.பி.பி. ஏற்பதில்லை. ஐந்து படிகளுக்கு மேல் வாங்குபவருக்கு 25% கழிவு உண்டு.**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,**
**சென்னை - 600 002. தொலைபேசி எண்: 8412367**



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## மேல்சாதி வெறியர்களின் கொட்டம்

தஞ்சை மாவட்டம் வல்லத்திற்கு அருகிலுள்ள மொன்னயம் பட்டி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவரான அமர்சிங், சாலை யோரப் பாலக் கட்டையில் உட்கார்ந்து இருந்ததற்காக, அக்கிரா மத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்களால் தாக்கப்பட்டார். இதைத் தடுக்க வந்த தாழ்த்தப்பட்டவரான ஆறுமுகத்தையும் மேல் சாதி வெறியர்கள் விட்டு வைக்கவில்லை. இதேபோல, அக்கிராம பேருந்து நிலையக் கட்டையில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்த்த முத்துக்குமாரை, மேல்சாதி வெறியர்கள் சாதியைக் கூறி இழிவுபடுத்தி, அவரது கையைப் பின்புறமாகக் கட்டித் தாக்கினர். 27.4.99 அன்றே மேல்சாதி வெறியர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவானாலும், வல்லம் போலீசு 9.5.99 அன்றுவரை குற்றவாளிகளைக் கைது செய்யாமல் மெத்த னமாகவே நடந்து கொண்டது.

## இந்திய இராணுவம்: சட்டபூர்வ குண்டர்படை

ஹைதராபாத் நகரிலுள்ள மெஹ்திபட்டணம் எனுமிடத்தி லுள்ள இந்திய இராணுவத்துக்குச் சொந்தமான நிலத்தை, விவசா யிகள் அரசின் அனுமதியோடு சந்தையாகப் பயன்படுத்தி வரு கின்றனர். இந்த நிலத்தை மீண்டும் தங்கள் வசம் எடுத்துக் கொள் ளுவதற்காக, இந்திய இராணுவம் விவசாயிகள் மீது காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை நடத்தியது. மே 11-ஆம் தேதி அதிகாலையில், தானியங்கித் துப்பாக்கிகளோடு நுழைந்த 300-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர், அச்சந்தையில் தூங்கிக் கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளை அடித்துத் துரத்திய தோடு, அச்சந்தையில் 10 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டிருந்த விற்ப னைக் கூடங்களையும் இடித்துத் தள் ளிவிட்டனர்.

## அபாயத்தில் தமிழ் வழி ஆரம்பக் கல்வி

தமிழக அரசு நடத்தும் மற்றும் தமிழக அரசின் நிதியுதவி பெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில், ஒவ் வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் இருக்க வேண்டும்; அந்த எண்ணிக் கையை எட்டாத பள்ளிகள் / வகுப்பு கள் மூடப்படும் என தி.மு.க. அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவு வந்த மறுநிமிடமே, நெல்லை மாவட்டத்தில், ஐந்து தமிழ்வழி ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இழுத்து மூடப்பட்டு விட்டன. ஆசிரி யர்களை வேலையை விட்டு விரட்டும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டுள்ள இந்த அரசு ஆணை, மறுபுறம் தமிழ்வழிக் கல்வி ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் கழுத்துக்குக் கத்தியாய் மாறி நிற்கி றது.

## சந்திரிகாவின் முகத்தில் கரி பூசிய ஈழத் தமிழர்கள்

தனது சிங்கள இனவெறியை மறைத்துக் கொள்ளும் முக மாக, சந்திரிகா அரசு சிறீலங்கா இராணுவத்தில் ஈழத் தமிழர்களை யும் சேர்த்துக் கொள்ளப் போவதாக அறிவித்து, யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆள் சேர்ப்பு மையங்களைத் திறந்துள்ளது. ஆனாலும், இது நாள்வரை, ஒரு ஈழத் தமிழனும் ஆள் சேர்ப்பு மையங்களை எட்டிக் கூடப்பார்க்கவில்லை. எப்படியாவது ஒரு ஈழத் தமிழனை யாவது சிங்கள இனவெறி இராணுவத்திற்குள் சேர்த்து விடுவது என்ற நப்பாசையில், ஆள் சேர்ப்பு மையங்கள் காலவரையின்றித் திறந்திருக்கும் என உத்தரவிட்டுள்ளார் சந்திரிகா.

## இந்தியக் கப்பற் படையின் அடாவடித்தனம்

இராமேசுவரம் கடற்பகுதியில் பழுதடைந்து போன மீன்பி டிக் கப்பலை கரைக்கு இழுத்து வந்து கொண்டிருந்த மீனவர்களை, தங்களின் கட்டளைக்கு கீழ்படியவில்லை என்ற காரணத்தைக் கூறி, இந்தியக் கப்பற்படை சுற்றி வளைத்துத் தாக்கியதோடு, ஆறு மீனவர்களை கடற்படை முகாமுக்கு இழுத்துச் சென்று சட்டவி ரோத இராணுவக் காவலில் வைத்தது. இதையடுத்து, ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கப்பற்படை முகாமைச் சுற்றி வளைத்து, இராணுவக் காவலில் உள்ள மீனவர்களை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். மீனவர்களை அச்சுறுத்தி துரத்திவிட முடியாது எனப் புரிந்து கொண்ட கப்பற்படை, தமிழ கப் போலீசின் மூலம் சமாதானம் பேசி, மீனவர்களைத் தாக்கிய 20 கப்பற் படையினர் மீது வழக்குப் பதிவு செய்ய ஒத்துக் கொண் டது.

## காங்கிரசின் 'சனநாயக' கலாச்சாரம்

பீகார் மாநில இளைஞர் காங்கிரசு தலைவராக தன்விர் அக்தர் என்பவரை காங்கிரசு மேலிடம் நியமித்தது. இதைச் சகித் துக் கொள்ளாமல் குமுறிக் கொண்டிருந்த எதிர்க் குழு, பதவி யேற்க வந்த தன்விர் அக்தரை பாட்னா தொடர்வண்டி நிலையத்தி லேயே சுற்றி வளைத்து நையப்புடைத்தனர். இத்திடீர்த் தாக்குத லால் அரண்டு போன தன்விர் அக்தர், பதவியினை ஏற்றுக் கொண்டால் உயிரே போய்விடும் எனப் பயந்து, நியமனக் கடித மையின் ஈரம் உலருவதற்கு முன்பே, தனது பதவி விலகல் கடிதத்தை மேலி டத்திற்கு அனுப்பிவிட்டார்.



அமெரிக்க இராணுவக் கூட்டை எதிர்த்து நாடாளு மன்றத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் போலீ சுடன் மோதும் பிலிப்பைன்சு மக்கள்.

## அமெரிக்க இராணுவக் கூட்டை எதிர்த்து...

பிலிப்பைன்சு நாட்டினுள் அமெரிக்க இராணுவமும், பிலிப் பைன்சு இராணுவமும் இணைந்து பயிற்சி எடுக்கும் ஒப்பந்தத்திற்கு, பிலிப்பைன்சு நாடாளுமன்றம் மே மாத இறுதியில் முறைப்படி அங்கீகா ரம் வழங்கியுள்ளது. பிலிப்பைன்சில் மட்டுமல்லாது, தென் கிழக்காசியப் பகுதியெங்குமே அமெரிக்க இரா ணுவ மேலாதிக்கத்துக்கு வழிவகை செய்யும் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து, பிலிப்பைன்சு நாடெங்கும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்து வருகின்றன.

## அருவெறுப்பான காட்டுமிராண்டித்தனம்

'தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாதற்காக' அஸ்ஸாமில் பணியாற்றி வரும் அஜித் சிங் என்ற இராணுவ வீரன், ஏப்ரல் 13-ஆம் தேதி, பட்டப் பகலில் பல பேர் கண் முன்னால், 16 வயதான மூளை வளர்ச்சி குன்றிய பெண்ணைப் பாலியல் பலாத் காரப்படுத்தினான். அஜித் சிங்கின் மீது கல்லை வீசியெறிந்து, இக்காட்டுமிராண்டிதனத்தைத் தடுத்திட முன் வந்த பலரையும், அவன் துப்பாக்கியைக் காட்டித் துரத்தியடித்தான். மாவட்ட நீதி மன்றத்திற்கு அருகாமையில், பலபேர் கண் முன்னால் இந்த மனித உரிமை மீறல் நடந்துவிட்டதால், இந்திய இராணுவத்தால் இதனை மூடி மறைக்க முடியவில்லை.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai 600 083.
Printed by him at, EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42646/85
Regd. No. TN/MS(S) 622 / 99
www.padippakam.com




நன்றி: நக்கீரன்

# இதுதான் இன்றைய இந்தியா

''கொள்கை, இலட்சியமெல்லாம் முக்கியமல்ல. கட்சி - இயக்கம் தான் முக்கியம்; இலட்சியத்துக்காக கட்சி - இயக்கத்தைப் பலி கொடுக்க முடியாது. அவற்றைக் கைவிட்டாவது கட்சியை - இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டும்'' என்பது ஈரோடு திட்டத்தைப் பெரியாரும், திராவிட நாடு கோரிக்கையை அண்ணாதுரையும் கைவிட்டபோது அவர்களின் வாரிசுகளுக்குக் கற்றுக்கொடுத்த பாடம். அதன் பரிணாம வளர்ச்சிதான் தேர்தல்வெற்றி, பதவி சுகத்துக்காக எதையும் கைவிடலாம்; யாருடனும் கூடிக் குலாவலாம் என்று திராவிடக் கட்சிகளின் இன்றைய முடிவும்.

இங்கே ஆர்.எஸ்.எஸ். பேரணி மேடையில் காவியுடை, காக்கி அரைக்காலுடை - கருப்புத் தொப்பி கயவர்களின் அணி வரிசையில் (இடமிருந்து நான்காவதாக) விரைப்பாக நின்று, நிமிர்த்திய நெஞ்சில் கைவைத்து உறுதிமொழி எடுத்துக் கொள்பவர், தி.மு.க.வின் முன்னாள் ''தலித்'' அமைச்சர், சங்கரன் கோவில் நகரவைத் தலைவர், சில காலம் வைகோவின் ம.தி.மு.க. தலைவர் தங்கவேலு. ''ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூலமாக நம்நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும் என்ற நம்பிக்கை உள்ளது ஆர்.எஸ்.எஸ். காரர்கள் சண்டை செய்பவர்கள் அல்ல. தாமாக முன்வந்து சேவை செய்யும் அமைப்புதான் இது. நாட்டுக்கு ஆபத்துவரும் நேரத்தில் ஆர்.எஸ்.எஸ். கை கொடுக்கும் என்பது நிச்சயம். இதனைக் கருத்தில் கொண்டுதான் அறிஞர் அண்ணாவே அப்போதே அதற்கு நிதி உதவிக்கு அனுமதி அளித்தார்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆர்.எஸ்.எஸ். என்பது Ready for self service என்கிற புதுமையான விளக்கமும் அருளினார். இதற்கு முன்பாக நெல்லை - சங்கரன் கோவில் அருகே நடந்த 20 நாள் பயிற்சி முகாம் முடிவில் மடப்பள்ளி நகர தி.க. பிரமுகர் பழனி இனிப்பு வழங்கி, ''அய்யா பெரியாரின் கனவை நனவாக்கியவர்கள்'' என ஆர்.எஸ். எஸ். காரர்களைப் பாராட்டினார்.

''பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்ததன்மூலம் பெரியார், அண்ணா கொள்கைகளை தி.மு.க. கைகழுவி விட்டது; துரோகம் செய்துவிட்டது'' என்று அனைத்திந்தியப் பொதுச்செயலாளர் சுர்ஜித் முன்னிலையில் கூடிய தமிழ் மாநில சி.பி.எம். கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதே பாணியில் தனது பொதுச் செயலாளர் ஏ.பி. பரதன்முன்னிலையில் கூடிய தமிழ்நாடு சி.பி.ஐ.யும் முடிவு செய்துள்ளது. இத்தீர்மானம் நிறைவேற்றிய கையோடு சுர்ஜித் போயசு தோட்டத்துக்குப் போய், ''அம்மா'' ஜெயலலிதாவை 40 நிமிடம் தரிசித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். இவ்விரு கட்சிகளின் மாநிலச் செயலாளர்கள் சங்கரய்யாவும், நல்லக்கண்ணுவும் ஒரே குரலில், ''இப்போது ஊழல் ஒரு முக்கியப் பிரச்சினை அல்ல; அது எப்போதும் இருக்கும் பிரச்சினை, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். மதவாத சக்தியை வீழ்த்துவதுதான் முக்கியம். அதற்காக பரந்த அளவில், ஒரு உறுதியான முற்போக்கு அணியை உருவாக்குவோம்'' என்று கூறியுள்ளனர். இதற்காக ஜெயலலிதா, சோனியா தலைமையிலானவை மதவாத எதிர்ப்புக் கட்சிகள் என்று நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர்.



திராவிடக் கட்சிகளின் பரிணாம வளர்ச்சி; தேசியம், மதவாதத்தில் சங்கமமாகிவிட்டார்கள் என்றால், இந்தப் போலிகளின் பரிணாம வளர்ச்சி அண்ணாயிசம, அம்மாயிசக் கட்சிகளாக சீரழிவதில் முடிந்துள்ளது. நாட்டு நலன் என்கிற பெயரில் நாடாளுமன்ற நாற்காலிக்காக இந்த ஓட்டுப் பொறுக்கிகள் செய்யும் சந்தர்ப்பவாத சாகசங்களை இனிமேலும் சகித்துக் கொள்ளப் போகிறோமா?

படிப்பகம்